உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 6 வியாழக்கிழமை (20-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:114

## ஐ.நா. சாசனங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

# மனித உரிமைகளை உள்ளடக்கி இருதரப்புகளும் கூட்டு பிரகடனம்

## அடுத்த சுற்று பேச்சின்போது வெளியிடுவதற்கு இணக்கம்

- ஜப்பானிலிருந்து ந.வித்தியாதரன் -

ஹக்கோனி,மார்ச்20

**ஐ.நா.சாசனங்கள், ஐ.நா.நியமங்கள் போன்றவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில பொதுவான மனித உரிமைகள் அடங்கிய ஒரு பிரகடனத்தை வெளியிடுவது என்று அரசும் - புலிகளும் இணங்கியிருக்கின்றனர். தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்த ஏழாவது சுற்றுப் பேச்சுக்களின்போது இந்தப் பிரகடனம் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

ஜப்பானின் ஹக்கோனி நகரில் நேற்று இடம் பெற்ற இரண்டாம் நாள் பேச்சுக்களின்போது மனித உரிமைகள் விவகாரம் முக்கியமாக ஆராயப்பட்டது.

பிரபல மனித உரிமைச் செயற்பாட்டாளரான இயன் மார்ட்டினும் நேற்றைய பேச்சுக்களில் கலந்துகொண்டார்.

மனித உரிமைகளை உள்ளடக்கிய கூட்டுப் பிரகடனம் ஒன்றை வெளியிடுவது பற்றி அங்கு விவாதிக்கப்பட்டது.

நேற்றுக் காலையும், மாலையும் ஆராயப் பட்ட விவரங்கள் குறித்து விடுதலைப் புலிக ளின் பேச்சுக் குழுத் தலைவர் அன்ரன் பால சிங்கம் தகவல் (14ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்கள் அறிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்20

சர்வதேச கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் மூழ்கடிக் கப்பட்ட சம்பவத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்களை அரசியல்துறை நடுவப் பணியகம் வெளியிட்டுள்ளது.

அந்த மாவீரர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ கப்பல் கப்டன் சிலம்பரசன் அல்லது ரஞ்சன் (ஆழியவளை - யாழ்ப்பாணம்).

★ இரண்டாம் நிலை அதிகாரி சுடர்ணன் (கள்ளப்பாடு - முல்லைத்தீவு).

★ மூன்றாம் நிலை அதிகாரி மேகன் (பன்குளம் - திருமலை).

★ 'ஏபிள் சீமன்' எழில் கண்ணன் (நீர்வேலி - யாழ்ப்பாணம்).

★ "ஏபிள் சீமன்" இளம்பரிதி (அளவெட்டி - யாழ்ப்பாணம்).

★ 'கடேற்' தூயவன் (திருவையாறு - கிளிநொச்சி).

★ தலைமை அதிகாரி இரும்பொறை (வண்ணார்பண்ணை - யாழ்பபாணம்.)

★ தலைமைப் பொறியியலாளர் அம்பிகைவாணன் (சித்தங்கேணி - யாழ்ப்பாணம்.)

★ இரண்டாம் பொறியியலாளா தணிகைமாறன் அல்லது தனேந்திரன் (மாரீசன்கூடல் - யாழ்ப்பாணம்.)

★ மூன்றாம் பொறியியலாளர் அமுதன் (மட்டுவில்நாடு, பூநகரி, கிளிநொச்சி)

★ 'போசன்' நவநீதன் அல்லது சிந்து (கொக்குவில் - யாழ்ப்பாணம்.) (ஒ)

## 'சிரான்' உபகுழுவின் செயற்பாடுகள் நத்தை வேகத்தில்தான் நகர்கின்றன

### ஜப்பானில் புலிகள் குற்றச்சாட்டு

ஹக்கோனி,மார்ச்20

ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களின் இரண்டாம் நாளான நேற்று காலையும், மாலையும் இடம்பெற்ற அமர்வுகளில் 'சிரான்' அமைப்பின் செயற்பாடு பற்றி விரிவாக ஆராயப் பட்டது.

'சிரான்' உபகுழுவின் செயற்பாடுகள் நத்தை வேகத்தில்தானும் நகர்வதாக இல்லை என்று புலிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டது.

'சிரான்' உபகுழு பற்றி பேச்சுக்களில் விரிவாக ஆராயப்பட்டது. அது பற்றி விளக்குவீர்களா என்று புலிகள் தரப்புப் பேச்சுக்குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கத்திடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

தமிழ்ச்செல்வன்தான் அதன தலைவர். அந்த விடயங்களை அவர் தான் வெளியிட்டார். சிரானின் செயற்பாடுகள் நத்தை வேகத்தில் நகர்வதாக அவர் சுட்டிக்காட்டினார். மாதம், மாதம் கூடிப் பேசுகின்றோம். தீர்மானங்களை எடுக்கின்றோம். ஆனால், உருப்படியாக எதுவும் நடக்கவில்லை என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

அகதிகளாக இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளுக்கு - கிராமங்களுக்கு - திரும்பவேண்டும். மீளக் குடியமரவேண்டும். இது முக்கியமான பிரச்சினை. இது இன்னமும் நடைபெறவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள் எமது முடிவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த உபகுழு. அந்த உபகுழு என்று பலதை அமைத்தும் பலன் ஏதுமில்லை. அதை அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வீதிக் கட்டுமானங்கள் எல்லாம் தரைமட்டமாகி இடிந்து போயுள்ளன. இதில் வீதிப் போக்குவரத்தையாவது சீர்ப்படுத்தித் தாருங்கள் என்று தமிழ்ச்செல்வன் கோரினார்.

சிரானின் செயற்பாட்டு வேகம் தணிந்து குறைந்து போவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

சிரானின் நிர்வாகக் கட்டமைப்பு பலப்படுத்தப்பட்டு அதற்கு அதிக நிதி வழங்கப்படவேண்டும் என அவர் கோரினார்.

வெளிநாடுகளில் இருந்து சிரானுக்கு நிதி வந்து சேரவில்லை. உலக வங்கியின் நிர்வாகச் சிக்கல் (14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் முன்னேற்றம் காட்டினால்தான் நிதியுதவி

### விசேட தூதர் எச்சரிக்கை

டோக்கியோ,மார்ச்20

சமாதானப் பேச்சுக்களில் உருப்படியான முன்னேற்றம் காட்டினால் தான் ஜப்பான் உட்பட சர்வதேச நாடுகளிடமிருந்து பண உதவி கிடைக்கும். ஜப்பானின் ஹக்கோனி நகரில் நேற்று நடந்த இரண்டாம் நாள் அமர்வில் கலந்துகொண்ட ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி அரச தரப்பு மற்றும் புலிகள் தரப்புக் குழுக்களுக்கு மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

நேற்று நடைபெற்ற முதலாவது அமர்வுப் பேச்சுக்களில் சிரான் பணிகள், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கான விவரத் தயாரிப்பு ஆகியன ஆராயப்பட்டன.

அதனால் பேச்சுக்களில் ஜப்பானில் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷியும் கலந்துகொண்டார்.

சிரான் உப குழு மற்றும் அதன் மீளாய்வு, ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக மேலோட்டமாக யசூசி அகாஷி விளக்கமளித்தார். யசூசி அகாஷி இந்த அமர்வில உதவி வழங்குவது' (14ஆம் பக்கம் பார்க்க)


## உளவுத்துறை உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டார்!

### கல்கிசைப் பகுதியில் சம்பவம்

கொழும்பு,மார்ச்20

பாதுகாப்பு உளவுத்துறையைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கல்கிசையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். கதிர்காமர் ரகுபதி (வயது 39) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டார்.

தமிழ் இயக்கமொன்றில் உறுப்பினராக இருந்த இவர், 1990ஆம் ஆண்டு முதல் பாதுகாப்புப் படையின் உளவுத்துறையில் இணைந்து பணியாற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அத்துருகிரிய மிலேனியம் சிட்டி விசேட உளவுத்துறைப் பிரிவுடன் சேர்ந்து பணியாற்றிய இவர், பல இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குபற்றி (14ஆம் பக்கம் பார்க்க)





மட்டக்களப்பு நாவலடியில் அன்னை பூபதியின் சமாதி அமைந்துள்ள இடத்தில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மட்டு.- அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஈகச்சுடர் ஏற்றுகிறார். பூபதியின் சமாதியை முதல் படத்தில் காணலாம்.

## பூபதி நினைவு நிகழ்வுகள் குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

தியாகி அன்னை பூபதியின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள்கள் குடா நாட்டில் நேற்று ஆரம்பமாகின.

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்ட அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் பிரதான நிகழ்வுகள் - நல்லூரில் கேணல் கிட்டு பூங்காவில் இடம்பெற்றன.

யாழ்.கல்வி வலய அலுவலர் பி. புவீந்திரராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை அரசியல்துறையின் யாழ். - நல்லூர் (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# துணைவேந்தர் மோகனதாஸ் நேற்றுப் பொறுப்பேற்றார்


யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் நேற்றுத் தனது பதவியினை பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளில் புதிய துணைவேந்தர் முதலில கலந்துகொண்டார்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சேர் பொன். இராமநாதனின் உருவச்சிலைக்கு அவர் மலர் மாலை அணிவித்தார்.

பின்னர் துணைவேந்தர் அலுவலகத்துக்குச் சென்ற புதிய துணைவேநதரை, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கைலாகு கொடுத்து வரவேற்றார். புதிய துணைவேந்தரின் சம்பிரதாயபூர்வ பதவியேற்பையடுத்து பல்கலைக்கழகச் சமூகத்தினர் புதிய துணைவேந்தருக்கு தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர். (ஐ-9)




யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் நேற்று தனது பதவியைப் பொறுப்பேற்பதற்காக வந்தபோது பதவிவிலகும் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவரைக் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் -
யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள சேர்.பொன் இராமநாதனின் உருவச்சிலைக்கு புதிய துணைவேந்தர் மாலை சூடி மரியாதை செலுத்துவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: ரமணன்)*

### படகுகள் மூலம் தாயகம் திரும்ப முயன்ற

# ஈ.பி.ஆர்.எல்.எப். போராளிகள் ஒன்பது பேர் இந்தியாவில் கைது!

இராமநாதபுரம்,மார்ச்20

இராமேஸ்வரம் வழியாக படகுகள் மூலம் இலங்கைக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். போராளிகள் 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் என்று தமிழகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இது பற்றித் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜீஸ் (வயது 33), ஸ்ரீரஞ்சன் (வயது 34), எமர்சன் என்ற ராஜா (வயது 30), வவுனியாவைச் சேர்ந்த செல்வம் என்ற சிவராஜா (வயது 22), ரவி என்ற குட்டி (வயது 28), கார்த்திக் (வயது 32), மட்டக்களப்பைச் சேர்ந்த மோகன் என்ற குட்டி (வயது 40) கிளிநொச்சியைச் சேர்ந்த ருக்மனன் என்ற தாஸ் (வயது 28) ஆகிய 9 பேருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

1990ஆம் ஆண்டில் இருந்து அகதிகளாகத் தமிழகம் சென்ற இவர்கள் அனைவரும் மண்டபம் அகதிகள் முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் புழல் மற்றும் திருச்சி அகதிகள் முகாம்களுக்கு மாற்றப்பட்டனர்.

கடந்த 16ஆம் திகதி இவர்கள் 9 பேரும் அகதிகள் முகாமிலிருந்து தப்பினர். பின்னர் மதுரை வந்து அங்கிருந்து பஸ் மூலம் இராமநாதபுரத்தை அடைந்தனர். அங்கு ஒரு லொட்ஜில் அறை எடுத்துத் தங்கினர்

அங்கிருந்து அவர்கள் படகுகள் மூலம் இலங்கைக்கு வரத் திட்டமிட்டிருந்தனர். இவர்களின் நடமாட்டம் குறித்து சந்தேகமடைந்த பொலீஸார் அனைவரையும் விசாரித்தபோதுதான் அவர்களின் திட்டம் தெரியவந்தது. இதையடுத்து 9 பேரையும் பொலீஸார் கைது செய்தனர்.

அகதிகள் முகாமகளில் தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டதாகவும் வேலை தேடிச் சென்னையில் தெருக்களில் பல காலமாக அலைந்ததாகவும் கிடைத்த வேலைகளும் சரிவர இல்லாத காரணத்தால் சொந்த நாட்டுக்கே திரும்பிச் செல்ல முடிவு செய்ததாகவும் கைதானோர் தெரிவித்தனர். (ஐ)

### அன்னை பூபதி நினைவு நிகழ்வில் உரை:

# இராணுவம் சீண்டினாலும் நாம் பொறுமையுடன் பேச்சு நடத்துகிறோம்

## மட்டு. - அம்பாறை தளபதி ரமேஸ் கூறுகிறார்

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்த காலம்முதல் ஆத்திரமூட்டும் பல நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டு வருகிறது. ஆனால், நாம் பொறுமையுடனும் நிதானத்துடனும் பேச்சு நடத்தி வருகிறோம் என்று புலிகளின் மட்டு - அம்பாறை விசேட தளபதி ரமேஸ் கூறினார்.

அன்னை பூபதியின் 15ஆம ஆண்டு நினைவு தின பிரதான நிகழ்வு மட்டு.நாவலடியில் அன்னை பூபதியின் நினைவாலயத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தளபதி ரமேஸ் இவ்வாறு கூறினார்.

தளபதி ரமேஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பேச்சுக்களில் நம்பிக்கை வைத்துள்ள நாம் சமஷ்டித் தீர்வுக்குக்கூட இறங்கி வந்துள்ளோம். இந்நிலையில் தொடர்ந்து எமது உரிமைகள் மறுக்கப்பட்டு, எம்மைச் சீண்டினால், சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் மக்கள் சக்தியைப் பயன்படுத்திப் போராடி எமது உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டி வரும் என்றார்.

புலிகளின் நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சேனாதிராஜாவின் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. தமிழீழ தேசியக் கொடியை தளபதி ரமேஸ் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரை மட்டு - அம்பாறை அரசியற்றுறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஏற்றி வைக்க, ஈகச் சுடரினை பிரம்மஸ்ரீ ஜெகநாதக் குருக்கள், வணபிதா ஜோசப் மேரி அடிகளார் ஆகியோர் ஏற்றினர். அன்னை பூபதியின் நினைவாலயக் கொடியை மாவீரர் லெப்டினன்ட் கேணல் விஜயகாந்தனின் தாயார் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி., புலிகளின் மட்டு - அம்பாறை மகளிர் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா ஆகியோர் உரையாற்றினர். (ஐ)

# நிவாரண ஒதுக்கீடுகளை நாளை கூட்டுறவுச் சங்கங்கள் பெறலாம்

## திட்டப் பணிப்பாளர் அறிவிப்பு

ஜனவரி மாத நிவாரண விநியோகத்துக்கான ஒதுக்கீடுகளை நாளை வெள்ளிக்கிழமை சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் செயலகப் புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். - இவ்வாறு திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனவரி 2003 ஆம் மாதத்திலிருந்து நிவாரண விநியோகங்களின் போது நுகர்வோர் பால் மா பைக்கற்றினை தாம் விரும்பும் பட்சத்தில் ப.நோ.கூ.சங்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அதற்குப் பதிலாக அதன் பெறுமதிக்கு அளவான நிவாரணத்திற்குரிய ஏனைய பொருள்களில் தாம் விரும்பும் பொருள்களில் அளவை குறைத்துப் பெற்றுக்கொள்ளலாம். இதன்பொருட்டு ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குத் தேவையான பால்மா பைக்கற்றுகளை தெரிவித்து அதற்கான ஒதுக்கீட்டினை செயலக புனர்வாழ்வுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# 'சிரான்' இனங்கண்ட 5 திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி,மார்ச்20

வடக்கு - கிழக்கு உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான செயற்குழு (சிரான்) இனங்கண்ட திட்டங்களில் ஐந்து திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் உடனடி மனிதாபிமானத் திட்டங்களாக 14 திட்டங்கள் 'சிரான்' அமைப்பால் இனங்காணப்பட்டிருந்தன. அத்திட்டங்களில் ஐந்து திட்டங்களை உடன் ஆரம்பிப்பதென கடந்த மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடந்த 'சிரான்' கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி -

ஐந்து திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆரம்ப நிதியாக 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் எட்டு கிராமங்களில் மீள் குடியமர்த்தல், முல்லைத்தீவு - மாங்குளம் - வன்னேரிக்குளம் வீதியைப் புனரமைத்தல், கிளிநொச்சியில் வெற்றிமனை அமைத்தல், யாழ்ப்பாணம், அம்பாறை, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் ஐஸ் தொழிற்சாலைகள் அமைத்தல், மன்னாரில் நெல் களஞ்சியம் புனரமைத்தல் ஆகிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன. (ஒ-3)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் அடுத்த வாரம் திரைப்படவிழா

இலங்கை திரிகோணகலை நிலையமும் யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் இணைந்து 'சினி யாத்ரா' எனும் தலைப்பில் இலங்கைத் திரைப்படவிழா ஒன்றினை எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 30ஆம திகதி வரை பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ளன.

பல சர்வதேச விருதுகள் பெற்ற ஒன்பது படங்கள் இத்திரைப்பட விழாவில் காண்பிக்கப்படவுள்ளன. அகலத் திரையில் காண்பிக்கப்படவுள்ள இத்திரைப்படங்களில் எட்டு சிங்கள மொழிப் படங்களும் ஒரு தமிழ் மொழிப் படமும் இடம்பெறும். அனைத்துப் படங்களும் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படும்.

சிங்கள இயக்குநர்களின் உன்னத படைப்புக்கள், திரைக் காவியங்கள் என பத்திரிகைகள் புகழாரம் சூட்டும் இத்திரைப்படங்களைத் தயாரித்த ஐந்து இயக்குநர்களும் திரைப்பட விழாவின் போது வருகைதருவதோடு திரை ரசிகர்களுடன் கலந்துரையாடவுள்ளனர். தமிழ் சமூகத்தின் கலை ரசனையை மேம்படுத்தும் நோக்கில் இலவசமாகக் காண்பிக்கப்படவுள்ள இந்த திரைப்படங்களைப் பார்த்து பயன்பெறுமாறு விழாவை ஒழுங்கு செய்யும் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கேட்டுள்ளார். இத்திரைப்பட விழா வாரநாள்களில் மாலை வேளைகளிலும் வார இறுதி நாள்களில் காலையும் மாலையும் இடம்பெறவுள்ளது. (ஐ)

# போக்குவரத்துச் சபைத் தலைவர் நாளை வடபகுதிக்கு வருகிறார்

யாழ்ப்பாணம்,மார்ச்20

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயற்பாடுகளை நேரில் அறியவும் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது குறித்து ஆராயவும் மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் எஸ்.பாருக் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோரும் தலைவருடன் வருகின்றனர்.

ஐந்து நாள்கள் இங்கு தங்கி நிற்கும் இவர்கள், காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

போக்குவரத்துச் சேவையை சீராக மேற்கொள்வதில் எதிர்நோக்கப்படும் இடையூறுகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை சபைத்தலைவர் மேற்கொள்வார்.

போக்குவரத்துச் சபையின் தலைவர் பதவியேற்ற பின்னர் யாழ்.மாவட்டத்துக்கு முதல் தடவையாக விஜயம் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# நல்லூரில் இளைஞர் குழுக்கள் அட்டகாசம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

நல்லூர் ஆலயத்தில் மேற்குப் புறமாக - கோயில் வீதியில் - கடந்த சில தினங்களாக இளைஞர் கோஷ்டிகளின் அட்டகாசம் அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்னிரவு இரண்டு இளைஞர் குழுக்கள் கோஷ்டிகளாக அணி பிரிந்து குழப்பத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. இளைஞர்களின் இத்தகைய ரகளையால் வீதியில் செல்வோர் பல சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. (ஐ-6-9)

# நாதஸ்வர, தவில் பாடசாலையை இணுவிலில் அமைக்க நடவடிக்கை

நாதஸ்வரம் மற்றும் தவில் இசைக் கலையை மேம்படுத்தி வளர்க்க இணுவிலில் நாதசுரம், தவில் இசைப் பாடசாலை ஒன்றை அமைக்க முதற் கட்டமாக ஐந்து லட்சம் ரூபாவை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஒதுக்கியுள்ளார்.

அகில இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் தலைவர் 'கலாபூசணம்' எஸ்.ஆர்.ஞானசுந்தரம் தலைமையிலான குழு ஒன்று அமைச்சரைச் சந்தித்து விடுத்த கோரிக்கையை ஏற்று அமைச்சர் உதவியை வழங்க முன்வந்துள்ளார்.

கலைஞர்கள் எதிர்நோக்கும் பல தரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கோரிக்கைகள் சமர்ப்பித்து அமைச்சருடன் தூதுக்குழுவினர் கலந்துரையாடினர்.

கடந்த வாரம் இணுவிலில் கூடிய சங்கத்தின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் அமைச்சருக்கு தூதுக்குழுவினர் சமர்ப்பித்தனர்.

நாதஸ்வரம், தவில் இசைப் பாடசாலையை அமைக்க முதற் கட்டமாக ஐந்து லட்சம் ரூபாவை உடன் வழங்குவதாகவும் -

ஏனைய விடயங்கள் குறித்து விவரமான அறிக்கை தரும்படியும் - அமைச்சர் மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

அமைச்சரிடம் சமர்பிக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

☆ முதுமை நிலையில் உள்ள கலைஞர்களின் வாழ்க்கை நலிவு இல்லாமல் தொடர, ஓய்வூதியத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்

☆ வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள கலைஞர் குடும்பங்கள் தமது கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

☆ கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் ஊனமடைந்த கலைஞர்களுக்கும், விதைவைகள் ஆக்கப்பட்ட பெண்களுக்கும் மாதாந்த உதவி வழங்கல்.

☆ வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து கஷ்ட நிலையில் உள்ள கலைஞர்களுக்கு விசேட நிவாரணத திட்டம் நடைமுறைப்படுத்தல்.

ஆகிய கோரிக்கைகளே சமர்ப்பிக்கப்பட்டன. (ஒ-3),

# இறையரசின் பங்காளராவோம்!

வாழ்நாளில் இன்புற்று இருந்தாய். லாசர் இன்னல்களையே அடைந்தார்.

ஆம். இவ்வுலகின் இன்பங்களையும் சுகங்களையும் மட்டுமே தேடித் தேடி அலைகின்றோம். இன்பம் மட்டுமே வாழ்வு என வாழ்கின்றோம். அதனால் துன்பத்தில் துவள்கின்ற

**தவக்காலச் சிந்தனை**
**-16ஆம் நாள்-**

ஏழைகளை திரும்பிப் பார்க்க மறுக்கிறோம். பட்டம், பதவி, பணம்,கௌரவம் என எமக்குள்ளேயே ஒரு வட்டத்தை உருவாக்கி அதற்குள்ளேயே வாழ்கின்றோம்.

ஒரு வேளைக்கு உணவின்றி வாடும் மனிதன் ஒருபுறம். மிதமிஞ்சி உணவை வீசும் கும்பல் மறுபுறம். இரக்கமில்லா மனம் - ஏழைக்கு ஈயாத மனம்.

ஏற்புடையவனாய் விண்ணக வாழ்வை உருவாக்கியவன் லாசரே.

ஆகவே, எம்மிடையே உள்ள லாசர்களை இனங்காணுவோம். அவனும் இறைவனின் சாயல் என ஏற்றுக் கொள்வோம்.

பணத்தைவிட மனதை பெரிதாக மானுட மனிதத்தையே பெரிதெனக் கொள்வோம். இவ்வுலகின் இன்பங்களை விட விண்ணக இன்பத்தை பெரிதென எண்ணிட இறையரசின் பங்காளர் ஆவோம். ☆

**ஜெயவதனி பூவிலிங்கம்**

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
யாழ்ப்பாணம் - பலாலி - யாழ்ப்பாணம்
கொட்டாஞ்சேனை - ரத்மலானை - கொட்டாஞ்சேனை
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
1若, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

ரூ. 16910 முதல் தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY Japanese Technology
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala
Bicycles Supreme

# இனி இவர் இல்லை!

1999இல் உலகக் கிண்ண முதற் சுற்றுடன் வெளியேறியது இலங்கை. பெறுபேறு, மூத்த - வயதான - வீரர்கள் பலர் அதிரடியாக வெளியேற்றப்பட்டனர். அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, மஹாநாம ஆகியோர் முக்கியமானவர்கள். அப்போது மஹாநாமவின் வெளியேற்றம் பற்றியே சர்ச்சை ஏற்பட்டது. மற்றைய இருவரது விலத்தலும் சரியானது என்றே எண்ணப்பட்டது. 1996இல் கிண்ணத்தை வெல்ல முக்கியமானவர்களாக இருந்தவர்கள் என்பதெல்லாம் செல்லாக் காசாகியது.

அந்த வெளியேற்றத்தால் மன முடைந்த மஹாநாம ஆஸ்திரேலியாவல் குடியேறினார். ரணதுங்க ஓய்வை அறிவித்தார். அரவிந்த மட்டும் சுய நம்பிக்கை காரணமாக ஓய்வை அறிவிக்கவில்லை. மீண்டும் தான் தெரிவாவேன் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்.

நம்பிக்கை வீண்போகவில்லை. 2002ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் சபை அவரை மீண்டும் அணிக்கு அழைத்தது. 36 வயதில் மீண்டும் அணிக்குள் வந்தார். டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் தன் திறமையை மீண்டும் ஒரு தடவை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்தார். தன் தெரிவு சரியானதே என்பதை உறுதிப்படுத்தினார்.

தென்னாபிரிக்காவுடன் நடந்த டெஸ்ட் போட்டியின் பின், சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். உலகக் கிண்ணப் போட்டியின் பின்னர் ஒரு நாள் போட்டிகளில் இருந்தும் தான் ஓய்வுபெற்றுவிடப் போவதாக அப்போது தெரிவித்திருந்தார்.

ஆஸ்திரேலியாவுடனான உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தின் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறும் தன் முடிவை அவர் உறுதிப்படுத்தினார்.

அணிக்கு தன்னை தேர்வு செய்த தேர்வாளர்களுக்கு நெருக்கடியைக் கொடுக்காத விதத்தில் தன் திறமையை இந்தத் தொடரில் மீண்டும் நிரூபித்துள்ளார். அவர். முக்கிய தருணங்களில் அபாரமாக ஆடி அணிக்கு உதவினார். 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## SHARP Action of the day



முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் ஆட்டமிழந்து வெளியேறும் அரவிந்த.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns




# சைமன்ஸின் ஆட்டமே வெற்றிக்கு காரணம்

## பொன்ரிங் தெரிவிப்பு

போர்ட் எலிசபெத்,மார்ச்20

உலகக் கிண்ணப் போட்டியின் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணியைத் தோற்கடிப்பதற்கு அன்ரு சைமன்ஸின் ஆட்டமே காரணம் என்று ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங் தெரிவித்



தார். நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தை மழை குழப்பியபோதும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# தங்கக் கிண்ணம் டெண்டுல்கருக்கு?



கென்யாவுக்கு எதிரான அரையிறுதியில் ஆட்ட நாயகன் விருது வெல்லும் பட்சத்தில் ஒன்றரைக்கிலோ தங்கக்கிண்ணம் சச்சினுக்குக் கிடைக்கும்.

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தொடர் நாயகன் விருது வெல்பவருக்கு ஒன்றரைக் கிலோ எடையுள்ள தங்கக்கிண்ணம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

ஜோகன்னஸ்பேர்க் மைதானத்தில் 23ஆம் திகதி நடக்கும் இறுதிப் போட்டி முடிவில் மேற்கிந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் கார்பிலட் சோபர்ஸ் இந்தக் கிண்ணத்தை தொடர்நாயகனுக்கு வழங்குவார்.

தொடர்நாயகன் விருதுக்கான போட்டியில் இப்போது சச்சின் 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கின்றார்.

• அவருக்கு அடுத்தபடியாக இலங்கை வீரர்கள் அத்தப்பத்து, சமிந்த வாஸ் ஆகியோர் எட்டுப் புள்ளிகளுடன் அடுத்த இடத்தில் இருக்கின்றனர். (10ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் வெற்றிகளுக்கு நியூஸிலாந்துதான் காரணம்

## கிறிஸ் கெய்ன்ஸ் தெரிவிப்பு



இந்திய அணி நியூஸிலாந்தில் சுற்றுலாவில் பெற்ற அனுபவமே தற்போது அவ்வணிக்கு கைகொடுக்கிறது.

- இவ்வாறு நியூஸிலாந்து அணியின் சகலதுறை வீரர் கிறிஸ் கெய்ன்ஸ் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

நியூஸிலாந்தில் இந்தியா சுமாராகத்தான் விளையாடியது. அது மட்டுமல்லாமல் உலக கிண்ண போட்டிகளுக்கு தங்களை தயார் செய்வதற்கும் அது ஒரு வாய்ப்பாக அமைந்தது. எங்கள் நாட்டில் வேகப்பந்து வச்சை அவர்கள் சமாளிக்க வேண்டி இருந்தது. அந்த அனுபவம் அவர்களுக்கு இப்போது கைகொடுக்கிறது.

இந்திய அணி நன்கு தேறிவிட்டது. 12 போட்டிகளுக்கு முன்பு வரை கூட, இந்திய அணி இனி அவ்வளவு தான் என்று பத்திரிகைகள் எழுதிக்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டாவது அரையிறுதி இன்று: இந்திய - கென்ய அணிகள் மோதல்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இரண்டாவது அரையிறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்திய - கென்ய அணிகள் இப்போட்டியில் மோதவுள்ளன. தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரின் பகல் - இரவு ஆட்டமாக இப்போட்டி நடைபெறவுள்ளது.


இலங்கை நேரப்படி பிற்பகல் 6.30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாக இருக்கிறது.

இந்திய அணி 4ஆவது தடவையாக உலகக்கிண்ண அரையிறுதிப் ஆட்டத்தில் பங்குபற்றுகிறது. 1983 இல் கிண்ணத்தை வென்றதன் பின்னர் இதுவரை அது இறுதிப் போட்டிக்குச் செல்லவில்லை. இம்முறை அது சாத்தியமாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் பங்குபற்றும் டெஸ்ட் அந்தஸ்தற்ற முதலாவது அணி என்னும் பெருமையை கென்யா பெற்றுள்ளது.

இவ்விரு அணிகளில் இந்தியா வலிமையானதாகத் திகழ்கிறது. சிறந்த துடுப்பாட்ட வரிசையையும், சிறந்த பந்துவீச்சாளர்களையும் அவ்வணி கொணடுள்ளது.

கடந்த ஏழாம் திகதி நடைபெற்ற 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்திலும் கென்யாவை இந்தியா தோற்கடித்தது. எனினும் அப்போட்டியில் முன்னணி துடுப்பாட்ட வீரர்களை சொற்ப ஓட்டங்களில் வீழ்த்தியதன் மூலம் இந்தியாவுக்கு பெரும் நெருக்கடியை (10ஆம் பக்கம் பார்க்க)



ஒபுயா

# பாகிஸ்தான் அணிக்கு புதிய தலைவர் லத்தீப்

கராச்சி,மார்ச்20

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியில் இருந்து வக்கார் யூனுஸ் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக விக்கெட் காப்பாளர் ரஷீட் லத்தீப் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ண ஆட்டங்களில் பாகிஸ்தான் அணி மோசமான தோல்விகளைச் சந்தித்ததை அடுத்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த மாற்றங்களைச் செய்துள்ளது.

அணியின் புதிய பயிற்றுநராக முன்னாள் அணித் தலைவர் ஜாவிட் மியான்டட் அறிவிக்கப்பட்டுள்ளார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

SHARP
தரத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்மா, உடல்பருமன், உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய் பிரச்சினைகள், தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்க விளைவுகளுமின்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

**ஆண்மைக் குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.**

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*
Dr.R.K.நவனீதன் DYNS, SMP, NC.
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல.54, மணிக்கூட்டு வீதி,
யாழ்.பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்தி அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசன பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

முகாம் நடைபெறும் நாள்கள்:
மார்ச் 18ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை

(15742)



## தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

எமது 16.03.2003 கூட்டத் தீர்மானத்திற்கும் முடிவுக்கும் அமைய புதிய வாகனப்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

17.03.2003 (C-26999) -நிர்வாகம்.


## சைவநெறித் தேர்வு

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையினரால் சைவநெறித் தேர்வு ஒன்று நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இச்சைவநெறித் தேர்வு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மருதடி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என நான்கு நிலைகளில் மாணவர்களிடையே நடைபெறவுள்ள இத்தேர்வில், ஒவ்வொரு பிரிவிலும் சித்தியடையும் முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

திறமைச் சித்திகள் பெறும் ஏனையோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். ஏப்ரல் மாதம் ஆறாம் திகதி நடைபெற இருக்கும் "மருதடியான் மலர் - 2003"நூல் வெளியீட்டு விழாவின் போது பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (ஒ-152)

## சாரணர் கிளையின் புதிய ஆணையாளர்

வலி.தெற்கு,மார்ச்20

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளையின் புதிய ஆணையாளராக செ.சிவபாதசுந்தரம் இலங்கை சாரணர் சங்கத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளையின் ஆணையாளராக கடந்த ஆறு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிவந்த ந.சௌந்தரராஜன் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து புதிய ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஒ-152)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மட்டுவில், நுணாவில் J/311 கிராம உத்தியோகத்தர்
**திரு.வே.துரைசிங்கம்**
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றதையிட்டு நாம் அவரை உளமார வாழ்த்துவதோடு, அவர் மேன்மேலும் பதவி உயர்வுகள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

(C-37015) - மட்டுவில் மத்தி மக்கள்.



## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும்

*வேட்பு மனுக்கள் ஏற்றல்:*
24.03.2003 தொடக்கம் 29.03.2003 பி.ப. 4.00 மணி வரை
*வேட்புமனு மீளப்பெறல்:*
30.03.2003 பிற்பகல் 4.00மணிக்கு முன்.
*தேர்தல் (தேவையாயின்) நடைபெறும் தினம்:*
16.04.2003 முற்பகல் 9.00 - நண்பகல் 12.00.
பொதுக்கூட்டத் திகதி: 16.04.2003 புதன்கிழமை 4.00மணி.

அங்கத்தவர்கள் அனைவருக்கும் அங்கத்துவப் பட்டியல், யாப்புப்பிரதி, வேட்பாளர் நியமனப்பத்திரம் அனுப்பப்பட்டுள்ளன. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோரும் புதிய அங்கத்துவம் பெறுவோரும் 30.03.2003 ஞாயிறு பி.ப. 4.00மணிக்கு முன்னர் அதிபர் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

17.03.2003. (37010) ந.சிவகடாட்சம் (அதிபர்/தலைவர்).



## நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

## திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

"அவமானம் தாங்காத ஒரு போராளி தனது சயனைட் குப்பியைக் கடித்து அந்த இடத்தில் மரணத்தைத் தழுவினார். அடுத்த போராளி மயங்கி விழும் வரை, இராணுவத்தினர் அவரைத் தாக்கியிருக்கிறார்கள். இத்தகைய கொடுமைகளும் சித்திரவதைச் சம்பவங்களும் அதிகரிக்க, புலிகளை வேண்டுமென்றே சீண்டி மோதச் செய்வதற்கு சிறீலங்கா அரச படைகள் முயல்வதை, புலித்தலைமை உணர்ந்தது. பாலா அந்தத் தருணத்தில் கொழும்பிலே இருந்தார். அரச படைகளைக் கட்டுப்படுத்துமாறு அரசுத் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால், பலன் எதுவும் கிடைக்கவில்லை. இந்தியப்படைகள் விட்டுச் சென்ற வெற்றிடத்தைப் படிப்படியாக நிரப்புமாறு இராணுவ உயர் பீடத்துக்கு பிரேமதாஸா கட்டளையிட்டிருப்பதை ஹமீது அவர்கள் மூலமாகப் பின்னர் அறிந்தோம். கிழக்கு மாவட்டங்களான திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் முதலிலும், வட பகுதியிலும் பின்னரும் முழுக்கட்டுப்பாட்டை நிறுவுமாறு படையினருக்கு அவர் பணிப்புரை வழங்கி இருந்தார். இரண்டாவது ஈழப் போரைத் தவிர்க்க முடியாது என்று உணர்ந்த பிரேமதாஸா, அதற்காகத் தமது ஆயுதப் படைகளைத் தயாராக்கினார்.

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

**உதயன் பத்திரிகை முகவர்களிடமும், பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**பக்கங்கள்: 479** **விலை 500/-**



## Computer College
## கணனிக் கல்லூரி

Center For Computer Studies
337,Kasthuriyar Road, Jaffna.
Tele phone & Fax : 021-3497
E-Mail: Collegeofcom@bharatmail.com

சிறியவர்! பெரியவர்! அனைவரிற்குமான

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**Ms Office**
Ms Word Ms Excel
Ms Access Ms Power Point
**Desk Top Publishing**
Corel Draw Adobe Photo Shop
**Visual Basic**
**Internet & E-Mail**

GIT

குறிப்பு:- * தமிழிலும் விரிவுரைகள், மற்றும் குறிப்புக்கள்
* இரவு நேர வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன

மேலதிக விபரங்களிற்கு:-
Computer College
கணனிக் கல்லூரி.
337.கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P :- 021-2222827



## முதலாவது பிறந்த தின வாழ்த்து



செல்வி
**விதுர்ஷனா நித்தியராஜ்**

**20.03.2003**

பருத்தித்துறை தும்பளையில் வசிக்கும் நித்தியராஜ் கௌரி தம்பதியினரின் செல்வப் புதல்வி விதுர்ஷனா தனது முதலாவது பிறந்த தினத்தினை தனது இல்லத்தில் இன்று வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, நடராசா அப்பப்பா, அப்பம்மாமார்களான, குணராசவதி, மகேந்திரேஸ்வரி (ஜேர்மனி), செல்வரத்தினமும், பிரபா, ஜீவனா, ரஞ்சா, [illegible] அத்தைமார்களும், சந்திரன், மகாலிங்கம், [illegible] மாமன்மார்களும், ஆசையப்பா முத்து (ஜேர்மன்), பெரியப்பா விமல், ஆசையம்மா சுசிலா (ஜேர்மன்), [illegible]. அக்காமார்களான, பிரியங்கா(ஜேர்மன்), [illegible]னி, கௌஷியும், துளசியும், மச்சாள்மார்களான [illegible], [illegible], மேகலா, நிலோ, ராதிகாவும், மச்சான்மார்களான [illegible], [illegible], ரஞ்சன், செந்தூரன், விநோ அனைவரும் தம்புருவளை பிள்ளையார் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்
நித்தியராஜ் [அப்பா]
(முத்துராஜா புரொடக்ஷன்)

உதயன்

# தாக்குதல் தவிர்ப்பில் அரசு - புலிகள் இணக்கம்

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையே தரையிலோ, கடலிலோ நடைபெறும் தாக்குதல் சம்பவங்களைத் தவிர்ப்பதற்கும் பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு முழுமையாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

கண்காணிப்புக் குழுவிடம் பொறுப்பை ஒப்படைப்பதற்கு வேண்டிய நடைமுறை ஒழுங்குகளை மேற்கொள்வது என்று ஜப்பானில் நடைபெற்றுவரும் ஆறாவது சுற்றுப் பேச்சுகளின் முதல் நாள் அமர்வின் ஆரம்பத்திலேயே அரசுத் தரப்புக்குழுவும் விடுதலைப் புலிகள் தரப்புக் குழுவும் முடிவுசெய்துள்ளன.

திருகோணமலைக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி புலிகளின் வர்த்தகக் கப்பல் அதில் பயணம் செய்த 11 போராளிகளுடன் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தால் சமாதானச் சூழல் பெரிதும் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டது.

புலிகள் ஆத்திரமடைந்து தமது அதிருப்தியையும் கடும் ஆட்சேபத்தையும் கண்டனத்தையும் வன்மையாகத் தெரிவித்தார்கள். அவர்கள் ஜப்பான் சமாதானப் பேச்சுகளைப் பகிஷ்கரிக்கலாம் என்ற கருத்தும் நிலவியது.

அதேவேளை - அரசாங்கம், கடற்படை நடத்திய தாக்குதலை நியாயப்படுத்திக்கொண்டு இருந்தது.

எனினும், புலிகள் சமாதானத்தில் தாம் கொண்டுள்ள பற்றுறுதி காரணமாக ஜப்பான் சமாதானப் பேச்சைப் பகிஷ்கரிக்காமல் அதில் கலந்துகொள்வது என்று முடிவு செய்தார்கள். இப்படியான தாக்குதல்கள் இனிமேல் நடைபெறமாட்டா என்ற உறுதியை அரசிடமிருந்து பெறுவோம் என்று உறுதி கூறித்தான் புலிகள் குழுவினர் ஜப்பானுக்கு விமானம் ஏறினார்கள்.

அரச குழுவினரும் அப்படித்தான். இவ்வாறான சம்பவங்கள் நிகழக்கூடிய வகையில் நடந்துகொள்ள மாட்டார்கள் என்று புலிகளிடம் உறுதி பெறுவோம் என்று கூறித்தான் அரச குழுவினரும் புறப்பட்டார்கள்.

இதுபற்றி 'உதயன்' கடந்த பதினெட்டாம் திகதி இந்தப் பத்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:-

"இனிமேல் இப்படியான தாக்கி அழிப்புச் சம்பவங்கள் நடக்கக்கூடாது. அதற்கு யாருக்கு யார் உறுதிமொழி அளிக்கிறார்கள் என்பதைவிட இரு தரப்பினரும் கூடிப் பேசி திட்டவட்டமான ஒழுங்குமுறைகளை வகுத்து அவற்றைக் கடைப்பிடிப்பதுதான் முக்கியம்."

'உதயன்' மேற்கண்டவாறு ஆலோசனை கூறியபடியே ஜப்பான் பேச்சுகளில் காரியம் நடந்திருக்கிறது.

பேச்சுகள் ஆரம்பமானபோது தாக்குதல் சம்பவங்களை அடுக்கடுக்காக எடுத்துக்கூறியும் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்களை ஆதாரங் காட்டியும் கடற்படையினர் மீது புலிகள் தரப்புக் குழு குற்றஞ்சாட்டியது.

இனிமேல் இப்படியான சம்பவங்கள், பிணக்குகள் கடலிலோ, தரையிலோ நடக்காமல் தவிர்ப்பதற்கு கண்காணிப்புக் குழுவினருக்குக் கூடுதல் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் வழங்கவேண்டும் என்று புலிகள் குழு ஆலோசனை கூறியுள்ளது. அதற்கு அரச குழு முழு இணக்கம் தெரிவித்துள்ளது.

விடயம் அவ்வளவோடு நின்றுவிடவில்லை. கண்காணிப்புக் குழுவினருக்கு கூடுதலான அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடற்படை அதிகாரிகளைக் கொண்ட அரச மற்றும் புலிகள், கண்காணிப்புக் குழு, நோர்வே தரப்புகள் இன்னும் மூன்று வாரங்களுக்குள் கிளிநொச்சியில் கூடிப் பேச வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நடந்ததை நினைத்து விஷமம் சாதித்துக்கொண்டு இருக்காமல் இப்படித் துரித நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

கண்காணிப்புக் குழுவினர் இரு தரப்பினருக்கும் பொதுவானவர்கள். பிரச்சினைகள், தகராறுகளைத் தீர்த்துவைப்பதற்குப் பொருத்தமானவர்களுங்கூட. புதிய ஏற்பாட்டின்படி அவர்களின் பொறுப்புகள் அதிகமாகின்றன. அதற்கேற்ப அதிகாரங்களும் அதிகரிக்கப்படுகின்றன.

இனிமேல் எவர் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் விடயம் அறிந்ததும் அந்த இடத்தில் கண்காணிப்புக் குழுவினர் நிற்பார்கள்.

புலிகளோ, படையினரோ யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறல் சந்தேகத்தின் பேரில் பிடிக்கப்பட்டால் அவர்கள் பொலீஸில் ஒப்படைக்கப்படமாட்டார்கள். கண்காணிப்புக் குழுவினரே அந்த விடயத்தைக் கையாளுவர்.

இப்படியான நடைமுறைகளால் எத்தனையோ பிரச்சினைகளும் சிக்கல்களும் தவிர்க்கப்படுகின்றன.

சமாதானப் பேச்சு மேசையில் நல்ல முடிவுகள் பல எடுக்கப்படுகின்றன. எனினும், அவை நடைமுறைப் படுத்தப்படுவதில் பெரும்பாலும் தாமதம் ஏற்பட்டே வருகிறது.

தாக்குதல் சம்பவங்களைத் தவிர்த்தல் மற்றும் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல் சம்பந்தப்பட்ட விடயத்தில் தாமதம் ஏற்படுமானால் அது சமாதான முன்னெடுப்புகளுக்குப் பெரும் முட்டுக்கட்டையாக அமைந்துவிடும் என்பதைச் சம்பந்தப்பட்ட அனைவரும் கவனத்திற்கொள்ளவேண்டும்.

# கிளிநொச்சி மாவட்டத்துக்கு 500 தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்20

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்நூறு தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவிருக்கின்றன என்று ரெலிகொம் நிறுவன வடக்கு - கிழக்குப் பொது முகாமையாளர் எஸ்.கனகசூரியர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் நிறுவப்பட்டுள்ள பரிவர்த்தனை நிலையம்மூலம் இந்த இணைப்புகள் வழங்கப்படவிருக்கின்றன என்றும் -

அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் - அவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான தொலைபேசிச் சேவைகளை சீராக மேற்கொள்ள வசதியாக யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் 125 மீற்றர்கள் உயரமுடைய இரு கோபுரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

இதுவரை 50இற்கு மேற்பட்ட இணைப்புகள் வழங்கப்பட்டு விட்டன என்றும் -

இணைப்புகள் வழங்கும் பணி தொடர்ந்து நடைபெறுகின்றது என்றும் - அவர் கூறினார். (ஒ-3)

## மாதர் மான்மியம்

**பூவையர் மாவையர் ஆகலாமோ?**

பூவினை தலையில் சூடி
பொழுதெல்லாம் 'பூ' மாலை கட்டி
பாவையர் வாழ்தல் கண்டு
- பூவையர் எனப்பேர் பெற்றார்
மாவினை முகத்தில் பூசி
மாக்குளைத்தே பொழுதைப் போக்கி
மாவினை நம்பி வாழும்
மறக்குல மாதர் தம்மை
மாவையர் என்று சொல்லின்
மன்னித்து விடுவரோ சொல்?
பூவையர் மாவையர் ஆனதாலே
புகுந்தது பல நோயிங்கு.

- விகடகவி.

# சங்கமதீர்த்தம் உள்ள கீரிமலையை புனித நகராகப் பிரகடனப்படுத்துக!

## வலி. வடக்கு புனர்வாழ்வுக் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்20

கடல்நீரும் ஊற்றுநீரும் கலக்கும் சங்கம தீர்த்தத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள கீரிமலைப் பிரதேசத்தை புனித நகரமாக்கி அபிவிருத்தி செய்து தாருங்கள்.

வலிகாமம் வடக்குப் புனர்வாழ்வுக் கழகத்தினால் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கீரிமலை நகுலேஸ்வரம் இலங்கையில் உள்ள புராதன பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகும். கிழக்கே கோணேஸ்வரமும் மேற்கே கேதீஸ்வரமும் முனீஸ்வரமும் தெற்கே தொண்டேஸ்வரமும் போன்று வடக்கே நகுலேஸ்வரம் சைவ சமயத்தவர்களுக்குப் புண்ணிய தலமாக விளங்குகின்றது.

மகாபாரத காலத்தில் அர்ச்சுனனும் அதற்கு முன் நளமகாராஜனும், முசுகுந்தச் சக்கரவர்த்தியும், நகுலமுனிவரும், மாருதப்புரவீகவல்லியும் தீர்த்த யாத்தரை செய்து நல்லருள் பெற்ற பெருமைக்குரிய தலம் இதுவாகும்.

இலங்கையின் வடகடலோரத்தில் கிழக்கே இருந்து வரும் பருத்தித்துறை வீதியும் மேற்கிலிருந்து வரும் காரைநகர் - பொன்னாலை வீதியும் தெற்கிலிருந்துவரும் காங்கேசன்துறை வீதியும் மானிப்பாய் வீதியும் வந்து சந்திக்கின்ற முக்கியமான இடமாகவும் உள்ளது.

இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் வந்து பிதிர்க்கடன் செய்வதற்குரிய புண்ணிய தலமும் இதுவாகும். இத்தலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து முன்னாள் ஜனாதிபதி அமரர் ஆர்.பிரேமதாஸ உள்ளூராட்சி அமைச்சராக இருந்த காலத்தில் தீர்த்த மண்டபங்களை அமைத்துப் பல வசதிகளைச் செய்து கொடுத்தார்.

கடந்த 20 வருடங்களுக்கு முன்பு கீரிமலையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நில அளவைகள் செய்து, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலை ஆரம்பிக்கப்பட்டு இடையில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலையால் அவை தடைப்பட்டுப் போயுள்ளன. எனவே, கீரிமலையின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு அப்பிரதேசத்தைப் புனித பிரதேசமாக்கி அபிவிருத்தி செய்துதருமாறு வேண்டுகின்றோம் - என்றுள்ளது. (ஒ-10)

# ஏ-9 வீதியில் உள்ள பாலங்களை முதலில் புனரமைக்கத் திட்டம்

கிளிநொச்சி,மார்ச்20

ஏ-9 வீதியைப் புனரமைக்கும் பணியை ஆரம்பிக்க வசதியாக அந்த வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள 21 பாலங்கள் முதலில் புனரமைக்கப்படவிருக்கின்றன. அதற்கு வசதியாக அந்தப் பாலங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் கண்ணி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஏ-9 பாதையை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகளை மேற்கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள எட்டு ஒப்பந்தகாரர்களும் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

வீதியின் இருமருங்கிலும் 10அடி அகலமான பிரதேசத்தை புல்டோசர்கள் கொண்டு திருத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கண்ணிகள் அகற்றப்பட்ட, கண்ணிகள் இல்லை என உறுதிசெய்யப்பட்ட பிரதேசங்களில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புனரமைப்புக்கு வசதியாக இந்த வீதியில் சேதமடைந்த நிலையில் உள்ள 21 பாலங்களின் அருகேயுள்ள பகுதிகளில் கண்ணி அகற்றும் பணிகளை மனிதநேய கண்ணி அகற்றும் பிரிவினர் ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

இந்தப் பணிக்கு 4அடி ஆழத்தில் புதைந்துள்ள கண்ணிகளை கண்டுபிடிக்கும் கருவி தேவையாக உள்ளது என்றும் -

அக்கருவியைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்தப் பணிகளை மேற்கொள்ள 'ஹலோரஸ்ட்' சர்வதேச அமைப்பு மூன்று டோசர்களைத் தந்துதவ முன்வந்துள்ளதாகவும் -

இந்தப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை வீதி அபிவிருத்தி அதிகார சபை தர உறுதியளித்துள்ளதாகவும் - மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

பாலங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் உள்ள கண்ணிகள் அகற்றப்பட்ட பின்னர் ஏனைய பிரதேசங்களில் கண்ணிகள் அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# வெளிநாடுகளுக்கான கட்டணத்தை 'ரெலிகொம்' நிறுவனம் குறைத்தது

யாழ்ப்பாணம்,மார்ச்20

சர்வதேச நாடுகளுக்கான தொலைபேசி அழைப்புக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதாக ரெலிகொம் நிறுவனத்தின் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 9ஆம் திகதிமுதல் புதிய கட்டணக் குறைப்பு நடைமுறைக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதிய கட்டணத்தின் பிரகாரம் பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஜப்பான், சிங்கப்பூர், இத்தாலி, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு நிமிடத்துக்கு 20ரூபாவும் -

ஆஸ்திரேலியா, மலேசியா, தாய்லாந்து, நியூசிலாந்து, சுவிற்ஸர்லாந்து, நெதர்லாந்து, நோர்வே, ரஷ்யா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகள் உட்பட 26நாடுகளுக்கு நிமிடத்துக்கு 22ரூபாவும் -

இந்தியா, மாலைதீவு, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு நிமிடத்துக்கு 30 ரூபாவும் -

மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு நிமிடத்துக்கு 40 ரூபாவும் - அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

**நாளை**

பங்குனி 07
வெள்ளிக்கிழமை
(21.03.2003)
திதி : திருதியை
முற்பகல் 10.15வரை.
நட்சத்திரம்: சுவாதி
முன் இரவு 11.07வரை.
சுபநேரம் : 6.18 - 7.48
ராகுகாலம்: 10.48 -12.18
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

இறப்பதற்குத் துணிந்துவிட்டவனுக்கு வாழ்க்கை சுமையாக இருக்காது.

# நிவாரண விநியோகத்தில் புதிய முறை அறிமுகம்

யாழ்ப்பாணம்,மார்ச்20

குடாநாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான ஜனவரி மாத நிவாரண விநியோகம் உடன் ஆரம்பிக்கப்படுகின்றது என்று அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

போதிய அரிசி கையிருப்பில் இல்லாத காரணத்தால் தாமதமாகிய நிவாரண விநியோகம் புதிய முறையில் தற்போது மேற்கொள்ளப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

அரிசி, மா, சீனி, பருப்பு ஆகிய பொருள்கள் நிவாரணத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்றும் -

பால்மா தேவையானோர் மேற்கண்ட பொருள்களின் அளவை குறைத்து பால்மாவைக் கொள்வனவு செய்யமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

முதல்முறையாக இம்முறை நிவாரணத்துக்கு மா வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# 346 பேருக்கு ஆசிரிய நியமனம்

திருகோணமலை,மார்ச்20

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் வெட்டுப்புள்ளி அடிப்படையில் மேலும் 346 பேருக்கு எதிர்வரும் 24ஆம் திகதி ஆசிரிய நியமனம் வழங்கப்படவிருக்கின்றது.

கடந்த 2000ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் ஆயிரத்து 250 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்க அரசு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இதன்படி 904பேருக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய 346பேருக்கு தற்சமயம் நியமனம் வழங்கப்படுகின்றது.

நியமனம் பெறுபவர்களுக்கான கடிதங்கள் மாகாண சபையால் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ-3)

# சுதேச மருத்துவர்கள் சிகிச்சையளிக்க ஆங்கில மருந்துகளை பாவித்தல் தவறா?

சுதேச மருத்துவர்களாக இருந்தாலும் சரி ஆங்கில மருத்துவர்களாக இருந்தாலும் சரி இரு சாராரினதும் நோக்கம் ஒன்றுதான். அதாவது ஆரோக்கியத்தைப் பேணுதல், நோய் வராது பாதுகாத்தல், ஏற்பட்ட நோயை சிகிச்சித்தல், சிகிச்சிக்க முடியாத விடத்து நோயாளியை அன்புடன் பராமரித்தல் மேற்கூறிய நான்கு விடயங்களும் ஒரு மருத்துவனால் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். சிகிச்சையை மேற்கொள்வதற்கு பின்வரும் நான்கு அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. வைத்தியன்
2. நோயாளி
3. ஔடதம்
4. பரிசாரகன்

வைத்தியன் என குறிப்பிடப்படும் போது சுதேச மருத்துவத்துறையில் பலதரப்பட்ட வைத்தியர்கள் காணப்படுகின்றனர்.

1. பல்கலைக்கழகத்தில் சுதேச மருத்துவத்தை பயின்று ஒரு வருட ஆரோக்கியசாலை பயிற்சியை பூர்த்தி செய்தபின் வைத்தியராகப் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள்.

2. தனியார் வைத்திய கல்லூரியில் (அரசின் அங்கீகாரம் அளிக்கப்படாத) பயின்று வைத்தியர்களாக பதிவு செய்யப்பட்டவர்கள்.

3. பரம்பரையாக வைத்தியத் தொழிலை மேற்கொண்டு வைத்தியர்களாக பதிவு செய்யப்பட்டவர்கள்.

4. வைத்திய பரம்பரையில் இல்லாது வைத்தியர்களிடம் கற்று வைத்தியர்களாக பதிவு செய்துள்ளவர்கள்.

மேற்குறிப்பிட்டவர்களில் முதலாவது பிரிவைச் சேர்ந்த வைத்தியர்கள் உடலியல், உடற்கூற்றியல், மருந்தியல், சமூக மருத்துவம், மகப்பேற்றியல் ஆகிய பாடங்களை தங்கள் 5 வருட பாடத்திட்டத்தில் கற்பதுடன் மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையம், வெலிசறை சுவாச நோய் ஆரோக்கியசாலை, அங்கொட தொற்று நோய் ஆரோக்கியசாலை, தொழுநோய் சிகிச்சை நிலையம் (தேசிய ஆரோக்கியசாலை, கொழும்பு) போன்ற சிகிச்சை நிலையங்களில் விரிவுரைகளும், ரோகங்களை நிச்சயிக்கும் வழி முறைகளையும் கற்கின்றார்கள்.

இந்தப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்கள் நான்கில் சித்தியடைந்தவர்களாக உள்ளனர். இவர்கள் ஆங்கில மருந்துகளைப் பற்றியும் அவற்றின் பக்கவிளைவுகள் பற்றியும் அறிந்துள்ளனர். இவர்கள் 5 வருட கற்கை நெறியையும் 1 வருட கால ஆரோக்கியசாலை பயிற்சியையும் பெற்றுள்ளனர். மற்ற பிரிவினர்களிலும் பார்க்க இவர்களுடைய பாடத்திட்டம் உயர்வானது.

வைத்தியத்துறை சார்ந்த மாணவர்கள் தங்கள் துறைசார்ந்த சிகிச்சை முறையைப் பேணுவது நியாயமானது. அரசாங்கம் சித்த மருத்துவத்துறை சார்ந்த தரமான மருந்துகளை வைத்தியர்களுக்கு ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் தயாரித்தோ அல்லது இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்தோ வழங்கவேண்டும். இந்த நடைமுறை அரசாங்கத்தால் செயற்படுத்தப்படவில்லை.

ஆங்கில மருந்துகளைப் பொறுத்த மட்டில் சகல மருந்தகங்களிலும் இலகுவில் வாங்கக்கூடியதாக இருக்கின்றது.

எந்த ஒரு மருந்தை ஒருவர் பாவிக்கும் போதும் அதனுடைய செய்கையையும், பக்கவிளைவுகளையும் அதன் அளவையும் எவ்வளவு காலத்திற்குத் தொடர்ந்து கொடுக்கலாம் என்பதையும் எந்த நோய் நிலைகள் இருக்கும் போது அந்த மருந்துகளைக் கொடுக்கக்கூடாது என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தில் சித்தமருத்துவத்துறையில் பயிலும் மாணவர்கள் மருந்தியல் பற்றி படிக்கும்போது ஆங்கில மருந்துகள் பற்றிய அறிவையும் பெறும்வகையில் பயிற்றப்படுகின்றார்கள். பல்வேறு ஆரோக்கியசாலைகளிலும் பயிற்சிக்காகச் செல்லும் போது ஆங்கில வைத்தியர்களினால் விரிவுரைகளும் குறிப்பிட்ட ரோக நிலைகளில் பாவிக்கப்படும் மருந்துகள், பக்க விளைவுகள் பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேற்கூறிய விடயங்களை குறிப்பிடுவதனால் சித்தவைத்திய பட்டதாரிகள் ஆங்கில மருந்துகளை பாவிக்கவேண்டும் என்ற வாதம் முனைவைக்கப்பட்டுள்ளதான - தவறான முடிவிற்கு எவரும் வரக்கூடாது. ஆயினும், யதார்த்தத்தை சிறிது பார்ப்போம்.

1. சித்த வைத்தியர்கள்தான் ஆங்கில மருந்துகளைப் பாவிப்பது இல்லை. ஆரோக்கியசாலையில் வேலை செய்யும் சிற்றூழியர்கள், மருந்தாளர்கள் மற்றும் மருந்தகங்களை நடத்துபவர்கள் எல்லோரும் பரவலாகப் பாவிக்கின்றார்கள். சில மருந்தகங்களில் மக்கள் தங்கள் நோய்களைக் கூறி மருந்துகள் பெறுகின்றனர்.

2. சித்த வைத்தியர்கள் நோயாளர்களை வீதியில் மறித்து அவர்களுக்கு பலவந்தமாக ஆங்கில மருந்துகளைக் கொடுக்கவில்லை. பளைப் பகுதியில் இருந்து முகமாலை, கொடிகாமம், சாவகச்சேரி, நுணாவில், கைதடி, அரியாலை போன்ற பகுதிகளிலும் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையுள்ள பகுதிகளிலும் வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம், சித்தன்கேணி, மானிப்பாய், தாவடி ஆகிய பகுதிகளிலும் எத்தனை எம்.பி.பி.எஸ். வைத்திய பட்டதாரிகள் தனியார் மருத்துவ நிலையங்களை நடத்துகின்றார்கள்? இந்தப் பகுதியிலுள்ள மக்களின் சுகாதாரத் தேவைகளைப் பெருமளவில் சித்தவைத்தியப் பட்டதாரிகளே நிறைவேற்றுகின்றனர்.

3. சித்த வைத்தியசாலையில் 1991ஆம் ஆண்டு முதல் ஒரு மகப்பேற்று விடுதியை சித்தமருத்துவத் துறை சார்ந்த விரிவுரையாளரும், வைத்திய உத்தியோகத்தர்களும் நடத்தி வந்துள்ளனர். சுமார் 950இற்கு மேற்பட்ட பிரசவங்கள் அங்கு நடைபெற்றுள்ளன. அதில் இரட்டைக் குழந்தைகள், பிருஸ்ட பாக வழிப்பிரசவம் (Breech Delivery) போன்றவைகளும் அடங்கும். அங்கு பிரசவம் நடைபெற்றபோது ஆங்கில மருந்துகளே இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்த வழங்கப்பட்டது. தொற்றுக்கள் ஏற்பட்ட போதும் அதற்கேற்ப ஆங்கில மருந்துகள் வழங்கப்பட்டன. இந்த காலப்பகுதியில் பிரசவம் பிழையான வழிகளில் நடத்தப்பட்டு அல்லது தவறான மருந்துகள் வழங்கப்பட்டு மரணங்கள் ஏற்பட்டதற்கான சரித்திரம் இல்லை.

4. 1992ஆம் ஆண்டு இலங்கையின் சுகாதாரக் கொள்கையை வகுப்பதற்காக, காலஞ்சென்ற மாண்பு மிகு ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவினால் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கு பேராசிரியர் ஈ.டீ.பொன்சேகா தலைவராகக் கடமையாற்றினார். சுதேச வைத்தியர்கள் சில நிலைமைகளில் ஒரு நோயாளியின் உயிரை காப்பாற்றுவதற்காக குறிப்பிட்ட சில மருந்துகளை நோயாளியை ஆரோக்கிய சாலைக்கு அனுப்பும் வரை தற்காலிகமாக பிரயோகிக்கலாம் என அக்குழு சிபார்சு செய்தது. அந்தக் குழுவில் பேராசிரியர் நிஸ்வி செறிவ், கொழும்பு மருத்துவபீட மருந்தியல் துறைத் தலைவர் டாக்டர் கீதா பெர்னாண்டோ மற்றும் பலர் அங்கத்தவர்களாக இருந்தனர்.

5. சித்த வைத்தியர்கள் தங்கள் துறை சார்ந்த தரமான மருந்துகளைப் பாவிப்பதுதான் அவர்களது விருப்பமும் உரிமையும் கூட. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தரமான மருந்துகளை அரச மருந்துக் கூட்டுத்தாபனமோ அல்லது தனியார் நிறுவனங்களோ தயாரிப்பதில்லை. அந்த நிலையில் 6 வருடப் படிப்பையும் பயிற்சியையும் பூர்த்தி செய்து வெளியேறும் மருத்துவப் பட்டதாரி தனது வாழ்க்கையை நடத்துவதற்கு தனது தொழிலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அதனால், மருந்தகங்களில் கிடைக்கக் கூடிய ஆங்கில மருந்துகளைப் பாவிக்கவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். அத்துடன் ஆங்கில மருந்துகள் பற்றிய அறிவை ஆங்கில வைத்தியசாலைகளில் வேலை செய்த பயிற்சியினால் பெற்றுள்ளனர். தரமான சித்த மருந்துகள் சந்தைப்படுத்தப்படாதது வைத்தியர்களின் குற்றமல்ல.

ஆகவே, யதார்த்தத்தை உணர்ந்து இந்த நிலைக்கான காரணத்தை நீக்க நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். சுதேச மருந்துகள் தயாரிக்கும் ஒரு மருந்தகத்தை நிறுவுவதற்கு அரச காணி ஒன்றை கைதடி நேவத்தையில் (2 ஏக்கர்)தெரிவு செய்தோம். ஆனால், அதில் ஒருவர் அத்துமீறி குடியேறியுள்ளார். அவருக்காக எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அது அவரது காணி என வாதாடுகின்றார். இது பற்றி அறிவிக்க வேண்டியவர்களுக்கெல்லாம் அறிவித்தோம். பலன் இல்லை. இதன் பின்னர் கோப்பாய் உதவி அரச அதிபர் கேதீஸ்வரனின் முயற்சியினால் அச்சுவேலியில் 8 பரப்பு காணியை பெற்றோம். இதனை ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் மேடைப் பேச்சாளர்களும் பத்திரிகைக்கு தகவல்கள் கொடுப்பவர்களும், சித்த வைத்தியர்கள் என்றால் எடுப்பார் கைப்பிள்ளை என நினைப்பவர்களும் யதார்த்தத்தை உணர்வதில்லை என்பதனாலேயாகும்.

6. சில தீவிர நிலைகளில் கொடுக்கக்கூடிய அளவிற்கு சித்தமருந்துகள் இல்லை. அவை தயாரிக்கப்படும் வரை பொதுமக்களின் நன்மை கருதி சில ரோக நிலைகளில் பாவிக்கக்கூடிய ஆங்கில மருந்துகள் சம்பந்தமான அறிவை சித்தமருத்துவப் பட்டதாரிகளுக்கு போதித்து அவர்கள் அதனைப் பாவிப்பதற்கு அனுமதி அளிப்பது புத்திசாதுரியமானதும், காலத்திற்கேற்ப ஆற்றக்கூடிய செயற்பாடுமாகும்.

7. மேலெழுந்தவாரியாக சித்த மருத்துவர்கள் ஆங்கில மருந்தை பாவிக்கின்றார்கள் என பேசி காலத்தை வீணடிப்பதில் சிலர் அக்கறை கொண்டுள்ளனர். மருந்துகள் கண்டுபிடிக்கப்படுவது மக்கள் பாவனைக்கேயாகும். மேற்படி கண்டனப்பிரசாரம் செய்வர்கள் யாழ்.மண்ணில் சித்தவைத்தியப் பட்டதாரிகள் ஆங்கில மருந்து பாவிதததினால் மரணமானவர்களின் புள்ளி விவரங்களைத் தருவார்களா? மற்ற வைத்தியர்களிடமும், எந்த தகுதி இல்லாதவர்களிடமும் சிகிச்சைக்காக செல்பவர்கள் எல்லோரும் சுகப்பட்டு ஆரோக்கிய நிலையில் உள்ளார்களா? அதன் புள்ளிவிவரங்கள் பதியப்பட்டுள்ளதா? சித்த மருத்துவர்கள் ஆங்கில மருந்துகளை பாவிப்பதனால் பாதிக்கப்படுபவர்கள் யாரிடம் முறையிட்டார்கள்?

பேராசிரியர்
**சுப்பிரமணியம் பவானி**
யாழ்.பல்கலைக்கழகம்

ஆகவே, வைத்தியத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆங்கில சுதேச மருத்துவர்கள் இரு சாராரும் சந்தித்து தங்களுக்குரிய பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசி பொதுமக்களுக்கு ஒரு தரமான சுகாதார சேவையை வழங்க முன்வர வேண்டும். ஒருவரை ஒருவர் விமர்சிப்பதாலோ குற்றங்களை திரும்ப திரும்ப பத்திரிகைகளில் பிரசுரிப்பதாலோ எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை. காரணத்தை அறிந்து அந்த காரணத்தை நீக்குவதற்கான வழிமுறைகளைக் கையாள வேண்டும்.






'அன்னை நாகா புட் சிட்டி' திறப்பு விழாவில் யாழ்.பொலீஸ் நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி குத்துவிளக்கேற்றுவதையும், அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், நுகர்வோர் ஒருவர் பொருள்களைக் கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தேவராஜன்)

## 'அன்னை நாகா புட் சிட்டி' நேற்று நகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

'அன்னை நாகா புட் சிட்டி', 175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் சேவைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும், யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர்.

கொழும்பு நகரில் அமைந்துள்ள அதிநவீன வசதிகளைக் கொண்ட சுப்பர் மார்க்கட்டுகளைப் போன்ற வசதிகளுடன் உணவுப் பொருள்கள், மின்னியல் உபகரணங்கள், ஆடம்பரப் பொருள்கள் மற்றும் இன்னோரன்ன பொருள்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இத்திறப்பு விழாவில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ். அரச அதிபர் எஸ்.பத்மநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மசிறி ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஓ)

## நல்லூர் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு திறமையின் அடிப்படையிலேயே உதவிகள் வழங்க நடவடிக்கை

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு திறமையின் அடிப்படையிலேயே உதவிகள் வழங்கப்பட உள்ளன.

இவ்வாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி இ.இரத்தினராஜா தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு பிரதேச செயலர் பிரிவினூடாக வழங்கப்படும் உதவி பற்றிக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 17 விளையாட்டுக்கழகங்கள் உள்ளன. இவற்றில் சிலவே ஆர்வத்துடனும், திறமையுடனும் செயற்படுகின்றன. முறையாகச் செயற்படாத கழகங்களுக்கு உதவுவது பயனற்றதாகும். எனவே, திறமையாகச் செயற்படும் கழகங்களுக்கே உதவிகளை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

நல்லூர் பிரதேச செயலகத்தால் விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுக் கழகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள விளையாட்டு போட்டிகளில் திறமைகளை சிறப்பாக வெளிக்காட்டுங் கழகங்களுக்கே இந்த உபகரணங்களை வழங்கத் திட்டமிட்டுள்ளோம் என்று தெரிவித்தார். (ஓ-12)

### சொந்த சம்மாந்துறைத் தொகுதியில் நடந்த சம்பவம்:

# அழைக்காமலே நுழைந்து மேடையில் அமர்ந்த அன்வர் இஸ்மாயில் வெளியேற்றப்பட்டார்

## ஐ.தே.கவினரின் குறைகேள் கூட்டத்திலிருந்து

கல்முனை,மார்ச்20

அழையா விருந்தினராக நுழைந்து மேடையில் அமர்ந்திருந்த திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான சட்டத்தரணி அன்வர் இஸ்மாயில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்.

அவருடைய சொந்த ஊர் சம்மாந்துறை. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதி சம்மாந்துறை. அங்கே அல் - மர்ஜான் மகளிர் மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை நடந்த ஐ.தே.க. ஆதரவாளர்கள் குறைகேள் கூட்டத்திலேயே இந்தச் சம்பவம் நடந்தது. ஐ.தே.க. ஆதரவாளர்களின குறைகளைக் கேட்டு ஆவன செய்வதற்குப் பல அமைச்சர்கள் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு அழைக்காமலே அன்வர் இஸ்மாயிலும் வந்திருந்தபோதுதான் திகாமடுல்ல மாவட்ட ஐ.தே.க. எம்.பி. மயோன் முஸ்தபாவினால் அவர் வெளியேற்றப்பட்டார்.

மேடையில் இருந்த அமைச்சர்கள அதிர்ந்து போனார்கள். பலர் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள். ஏனையோர் கைதட்டியும் விசில் அடித்தும் ஆரவாரம் செய்தும் தமது மகிழ்ச்சியையும் திருப்தியையும் தெரிவித்தார்கள்.

மயோன் முஸ்தபாவின் ஏற்பாட்டில் சம்மாந்துறைத் தொகுதி இணைப்பாளர் ஐ.எல்.எம்.மஹிர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

காலை 10.15 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. அமைச்சர்களான ராஜித சேனரட்ன, கபீர் ஹாஸீம், பி.தயாரத்ன, ஏ.எச்.எம்.அஸ்வர், ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக்கொட்டுவ, மயோன் முஸ்தபா உட்பட இன்னும் பல கட்சிப் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். கூட்டம் ஆரம்பமாகி 30 நிமிடங்களுக்குப் பின் திடீரென இம்மாநாட்டு மேடைக்கு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பியான எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் வந்து மேடையில் இருந்த அமைச்சர்களுக்கு கைகொடுத்துவிட்டு காலியாக இருந்த ஒரு கதிரையான தலைவரின் கதிரையில் அமர்ந்து கொண்டார்.

அப்போது கட்சியின் சம்மாந்துறை இணைப்பாளர் ஐ.எம்.எம். மாஹிர் தலைமை உரை நிகழ்த்துவதற்காக அமைச்சர்களை விளித்துக்கொண்டிருந்தார்.


"எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு எமது கட்சியில் இணைந்து கொள்வதற்கு இங்கு வருகைதந்துள்ள அன்வர் இஸ்மாயில் எம்பியை வரவேற்கின்றேன்" என்று மாஹிர் கூறினார். அப்போது பெரும் கரகோஷமும், கூச்சலும் எழுந்தன.

அதனைத் தொடர்ந்து திகாமடுல்ல மாவட்ட ஐ.தே.க. எம்.பி. மயோன் முஸ்தபா ஆரம்ப உரை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டார்.

"நான் பேசுவதற்கு முன் இங்கு சிறிய வைபவம் ஒன்று நடைபெறப் போகிறது" என்று அறிவுப்புச் செய்த மயோன் முஸ்தபா எம்.பி., "சம்மாந்துறை தொகுதியில் ஐதே.க. அழிந்து விட்டது. அக்கட்சியினர் எவரும் இத்தொகுதியில் இல்லையென பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்த சகோதரர் அன்வர் இஸ்மாயில் எம்.பி. இங்கு மண்டபம் நிறைந்த ஆதரவாளர்களைப பார்த்துவிட்டார். இனி அவர் அமைச்சர்களுக்குக் கைலாகு கொடுத்து விடைபெற்றுச் செல்லலாம். நாங்கள் இங்கிருந்து அவரை வெளியேற்றுகின்றோம்" என்று கூறினார்.

இதையடுத்து பெரும் கூச்சல், கோஷங்கள், விசிலடிப்பு ஆகியவற்றுக்கு மத்தியில் அன்வர் இஸ்மாயில் எம்.பி. அமைச்சர்களுக்குக் கை கொடுத்து, மண்டபத்தைவிட்டு வெளியேறிச் சென்றார். மயோன் முஸ்தபாவின் இந்த அதிரடி நடவடிக்கை, எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்தது. கூட்ட மண்டபம் சற்றுப் பரபரப்பு அடைந்தது. எனினும், அசம்பாவிதம் ஏதும் இடம்பெறவில்லை. கூட்டம் அமைதியாக நடைபெற்று முடிந்தது.

(ஓ)



யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி அண்மையில் கொழும்புத்துறையில் திறந்து வைக்கப்பட்டது. வங்கியின் முகாமையாளர் ம.கியூமன் உரையாற்றுவதையும், அருகில் சமுர்த்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவபாதசுந்தரம், யாழ்.பிரதேச செயலர் செந்தில்நந்தனன், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம், வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அ.யேசுதாசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (எ-76)

# கிராம அலுவலர் பிரிவுகளில் பணிமனை கட்ட நடவடிக்கை

தென்மராட்சி,மார்ச்20

யாழ்.மாவட்ட கிராம அலுவலர்களுக்கு அந்தந்தப் பிரிவுகளில் அலுவலகக் கட்டடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக மேற்படி விடயம் தொடர்பான விவரங்களை உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் சகல பிரதேச செயலர்களிடமும் கோரியுள்ளார்.

தற்போது கிராம அலுவலருக்கான நிரந்தர அலுவலகக் கட்டடம் உள்ள கிராம அலுவலர் பிரிவுகள், அரசிற்குச் சொந்தமான வேறு கட்டடங்களில் கிராம அலுவலர் அலுவலகம் உள்ள பிரிவுகள், பிரதேச செயலர் பிரிவினால் கிராம அலுவலர் அலுவலகம் அமைப்பதற்காக அரச காணிகள் பெற்றுக்கொள்ளக் கூடிய பிரிவுகள் ஆகியவற்றின் விவரங்களை அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-117)

# அரசியல் நோக்கம் இல்லாது சமுர்த்தி இயக்கம் செயற்படும்!

## அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்20

சமுர்த்தி அலுவலர்கள் அரசியல் நோக்கம் இன்றி செயற்பட வேண்டும் என்று சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கா வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு சுகததாஸ அரங்கில் சமுர்த்தி முகாமையாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி இயக்கம் அரசியல் நோக்கம் இல்லாது செயற்பட வேண்டும். முன்னைய ஆட்சியில் சமுர்த்தி இயக்கத்திற்கு ஆள்களைச் சேர்க்கும்போது அரசியல் செல்வாக்கின் பிரகாரம் நியமிக்கப்பட்டதாக அறிகின்றோம்.

இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் அரசியல் நோக்கின் அடிப்படையிலேயே செயற்பட்டார்கள். தற்போதைய அரசின் கீழ் அனைத்து சமுர்த்தி உத்தியோகத்தர்களும் அரசியல் நோக்கம் கருதாது செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறே இனி வரும் காலங்களிலும் சமுர்த்தி அலுவலர்கள் செயற்படவேண்டும் என்றார் அவர். (ஓ-12)

## சார மரத்திலிருந்து தவறிவீழ்ந்த இருவர் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்20

கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த வேளை சார மரத்திலிருந்து தவறி வீழ்ந்து இருவர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பிரதம தபாலகக் கட்டடத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரதம தபாலக நிர்மாண வேலையில் ஈடுபட்டிருந்தவர்களான கொழும்புப் பகுதியைச் சேர்ந்த ஐ.டி.சுனில் (வயது36), பிரனீந் (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ஓ-15)

## வீதி விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்20

கல்வியங்காடு மாஞ்சோலை வீதி, வாகனப் போக்குவரத்து வசதிக்காக அப்பகுதி மக்களின் ஒத்துழைப்போடு அகலமாக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் சைக்கிள் உட்பட சிறியரக வாகனங்கள் மட்டுமே இந்த வீதிவழியாகப் பயணம் செய்யக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் வீதியின் இரு புறமும் உள்ள காணிகளின் உரிமையாளர்களின் சம்மதத்துடன் பாதை விஸ்தரிக்கப்பட்டதால் தற்போது கனரக வாகனங்கள் செல்லக்கூடியதாக உள்ளது.

(ஓ-180)

## கணனிப்பிரிவு ஆரம்ப விழா

யாழ்ப்பாணம்,மார்ச்20

கோப்பாய் மகா வித்தியாலயத்தில் அமரர் வை.சுப்பிரமணியம் ஞாபகார்த்த கணனிப்பிரிவு தொடக்க விழா எதிர்வரும் சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறும். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை பேராசிரியர் க.சின்னத்தம்பி கலந்துகொள்வார்.

(ஓ-180)



மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் அண்மையில் தென்னைப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமுகமாக தமது பிரிவில் 125 குடும்பங்களுக்கு தென்னங்கன்றுகளை இலவசமாக வழங்கியுள்ளது. கழக சிரேஷ்ட உறுப்பினர் லயன் என்.சிவசுப்பிரமணியம் குடும்பத் தலைவர் ஒருவரிடம் தென்னங்கன்று ஒன்றைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ-135)

### திக்வெல்ல பகுதியிலிருந்து 10ஆம் திகதி புறப்பட்ட

# 65 இலங்கையர்களுடனான படகை கைப்பற்ற இத்தாலியிடம் அறிவிப்பு

65 இலங்கையர்களுடனான ட்ரோலர் படகு ஒன்று இத்தாலியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது என்று குற்றத் தடுப்புப்பிரிவு பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர். கடந்த 10 ஆம் திகதி அப்படகு திக்வெல்ல பகுதியிலிருந்து புறப்பட்டுள்ளது.

இத்தாலிக்கு சமீபமாகவுள்ள கடல் பகுதியைச் சென்றடைந்திருப்பதாக நம்பப்படும் அப்படகை கைப்பற்ற நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச பொலீஸார் மூலம் இத்தாலிப் பொலீஸாரிடம் அறிவிக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இப்படகு திக்வெல்ல பகுதியிலிருந்து புறப்பட்டுச் செல்ல தென்பகுதியிலுள்ள ஒரு பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உதவியிருக்கிறார் என்ற ஒரு தகவலும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலீஸாருக்குக் கிடைத்திருக்கிறது. அத்தகவல் குறித்தும் விசாரணை நடைபெறுகிறது. (ஐ)

# புற்பாய் உற்பத்தியாளருக்கு சுழற்சிமுறைக் கடன் திட்டம்

தென்மராட்சி பிரதேசத்தில் புற்பாய் உற்பத்தியில் ஈடுபடும் 50 தொழிலாளர்களுக்கு தொழிற் முயற்சிச் சுழற்சி கடன் வழங்க அகதிகளுக்கான ஐ.நா.தூதுவராலயத்தினர் முன்வந்துள்ளனர்.

பாய் உற்பத்திக்குத் தேவையான புற்கள், அதற்கான தையல் இயந்திரம் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்கென தலா 10ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படுமெனவும் -

இக்கடன் 24மாதங்களில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டுமெனவும் - தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாக இக்கடன்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இடப்பெயர்வின்போது புற்பாய் நெசவாளர்களின் உற்பத்தி உபகரணங்கள் சேதமடைந்தமையும், காணாமல் போனமையும் குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

# இலங்கை அகதிகளுக்கு சவூதியிலிருந்து 120 தொன் உலர் உணவுப் பொருள்கள்

இலங்கை அகதிகளுக்கென சவூதி அரேபிய அரசாங்கம் 5,580 பொதிகளில் அடைக்கப்பட்ட 120 தொன் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் 1,300 கூடாரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சவூதி அரேபியாவின் இலங்கைக்கான தூதுவர் முஹம்மது மஹ்மூத் அல் அலி ஊடாக வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மஷூர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம், அநுராதபுரம், குருநாகல், திருகோணமலை, பொலன்நறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள அகதி முகாம்கள், நலன்புரி நிலையங்கள் மற்றும் மீள் குடியேற்றக் கிராமங்களில் உள்ள அகதிக் குடும்பங்களுக்கு இப்பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

அரிசி, சீனி, உப்பு, பிஸ்கட், பால்மா மற்றும் பேரீச்சம்பழம் போன்ற பொருள்கள் இதில் அடங்குகின்றன.

சவூதி அரேபியாவின் நிதி, தேசிய பொருளாதார அமைச்சின் உயர் அதிகாரியான ஹுசைன் பின் பர்ஹான அல் மலிக், சவூதி அரேபியாவின் விசேட பிரதிநிதியாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த உணவுப் பொருள்களை அமைச்சர் நூர்தீன் மஷூரிடம் கையளிப்பார்.

(ஐ)

### அம்பாறை மாவட்டத்தில்

# முஸ்லிம்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படும்!

## கௌசல்யன் வாக்குறுதி

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களின் காணிகள் அவர்களிடமே ஒப்படைக்கப்படும். இவ்வாறு விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கொக்கட்டிச்சோலை விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற போது கௌசல்யன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்ள முஸ்லிம்களின் காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும். அக்காணிகளில் விவசாயம் செய்வதற்கு வேண்டிய ஒத்துழைப்பினை புலிகள் வழங்குவர். விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைய வந்த பல சிறுவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவால் வழங்கப்பட்ட 20 சிறுவர்களின் பெயர்களைப் பார்வையிட்ட கௌசல்யன் அவர்களில் பெரும்பாலானோர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளுக்கும் விசேட அதிரடிப் படையினருக்குமிடையிலான மாதாந்த சந்திப்பினை மீண்டும் ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்போவதாக போர்நிறுத்தக கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர். (ஓ-12)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Compaq Pen II 350 MMX கணனிகளும் கையடக்கத் தொலைபேசிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.34, சட்டநாதர் வீதி, திருநெல்வேலி, T.P.:2223786 (15724)

### திருமணசேவை

1977ஆம் ஆண்டு, செவ்வாய்க் குற்றமற்ற, Newzeland நிரந்தர குடியுரிமை பெற்றுவந்துள்ள மணமகனிற்கு மணமகள் தேவை. பொருத்தம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி,யாழ்ப்பாணம். (15740)

### தவறிவிட்டது

பூப்புனித நீராட்டுவிழாவிற்குரிய ஒலிப்பதிவு நாடாவொன்று சுன்னாகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள சுகந்தன் நகைத் தொழிலகத்தில் ஒப்படைத்துதவவும்.

(சன்மானம் வழங்கப்படும்)

(15745)

### ஆள்கள் தேவை

தொலைத் தொடர்பு நிலையத்திற்கு தொலைபேசி அல்லது கணனி அறிவுடைய ஆர்வமுள்ள பெண்களும், பகுதி நேர ஆணும் தேவை.

*320, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*
T.P.: 071-346622

(15743)

### விற்பனைக்கு

**Nissan Blue Bird**
மொடல 1983
**Full Option Car**
(சகல வசதிகளுடன் கூடியது)
விற்பனைக்குண்டு.
*தொடர்புகளுக்கு:-*
**GODWIN**
0777-708026

(15749)

### வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்20

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையால் நடத்தப்படும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30மணிக்கு 'பகவத்கீதை' தொடர் சொற்பொழிவு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் ஆ. குமாரவேலினால் நிகழ்த்தப்படும். (ஒ-15)

### கிறிஸ்தவ பாட ஆயத்த வகுப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்20

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புக்கான கிறிஸ்தவ பாடத்துக்கு ஆயத்த வகுப்பு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் காலை 8.30மணி தொடக்கம் மாலை 5மணிவரை "அகவொளி" குடும்ப வளத்துணை நிலையத்தில் இவ்வகுப்பு நடத்தப்படவுள்ளது.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் இதில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-12)

### மழை காரணமாக விசர் நோயால் நாய்கள் பீடிப்பு!

கைதடி,மார்ச்20

கைதடிப்பகுதியில் கடந்த வாரம் திடீரெனப் பெய்த மழையின் காரணமாக நாய்களுக்கு விசர்நோய் பீடித்திருப்பதாக கூறப்படுகின்றது.

நம்மை வளர்த்தோர் மீதும், சிறுவர்கள் மீதும் வளர்ப்பு நாய்கள் திடீரெனப் பாய்ந்து கடித்துக் குதறுவதாகவும் -

இதனால் பலர் தமது நாய்களை தாமே அடித்துக் கொல்வதாகவும் தெரிவிக்கின்றனர். (ஒ-75)

---

## சங்கரத்தை கரந்தைக் குளவத்தை முருகன் ஆலய மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**முருகனடியார்களே!**

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருஷம் பங்குனித்திங்கள் 7ஆம் நாள் (21-03-2003) வெள்ளிக்கிழமை காலை 6.30-7.30 மணிவரை உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

ஆகமக்கிரியா ஜோதி பிரதிஸ்டா பிரதமகுரு:

**சிவஸ்ரீ சதா.மகாலிங்கசிவக்குருக்கள்** (நாயன்மார்கட்டு)

பங்குனித்திங்கள் 6ஆம் நாள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை காலை 7.00-2.30 மணிவரை எண்ணெய்க்காப்பு, பால்காப்பு சாத்துதலும் நடைபெறும்.

- ஆலய பரிபாலன சபையினர்.

*விளம்பர அன்பளிப்பு:*

**கணேசா தொலைத்தொடர்பு நிலையம்**
முருகன் கோயில் வீதி,சங்கரத்தை.
★ கொழும்பு, யாழ்ப்பாண சொகுசு வான் சேவை நடைபெறும்.
(c37018) T.P NO: 070 -212985, 0777-738637

---

### யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

23.03.2003 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் 30.03.2003 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(C/37016) வே.வெற்றிவேல் (செயலாளர்)

---

### தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்,

13.03.2003 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது தாயார்

**திருமதி கோ.காசிலிங்க சர்மா**

அவர்களின் இறுதிக்கிரியைகள் நெடுந்தீவில் நடைபெற்றன. ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் உடுவிலில் உள்ள எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்களை கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

**நிகழ்வுகள்**

22.03.2003 சனிக்கிழமை பகல் 10மணிக்கு தசாகம்
23.03.2003 ஞாயிற்றுக்கிழமை பகல் ஏகோதிட்டம், மாசிகம்
24.03.2003 திங்கட்கிழமை பகல் சபிண்டீகரணம்
25.03.2003 செவ்வாய்க்கிழமை பகல் கிருகயக்ஞம்

*முருகமூர்த்தி கோவிலடி,*
*உடுவில்.* (C-37017)

கா. குகானந்தக் குருக்கள்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## அஞ்சல் ஆசான்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்

*தபாற் சேவையை மக்களுக்கு வழங்குவதற்கென*
*வட பிராந்தியத்தின் அஞ்சல் அதிபர் நாயகம்*
*திரு. நா. ஜெயரட்ணம் ஐயாவின் தலைமையின் கீழ்*
*அஞ்சல் அத்தியட்சகர் S. சிவராஜசிங்கம் ஐயாவும்*
*நிர்வாக உத்தியோகத்தர் S. மார்க்கண்டேயர் ஐயாவும்*
*துணை நின்று வழி நடத்தும் உப - அஞ்சலதிபர்களும்*
*சிற்றூழியரும், உதவியாளர்களையும்*
*பதவி உயர்வு வழங்க என அரசு*
*விண்ணப்பம் கோரிய வேளைதனில்...*
*சிற்றூழியரும் உதவியாளரும்*
*நிரந்தரமானவர்களும் நிரந்தரமற்றவர்களும்*
*பேதமும் இன்றிப் பிரிவும் இன்றி*
*நாமெல்லாம் ஒன்று கூடியே*
*பதவி உயர்ந்திட பரீட்சை எழுதிட*
*பாடம் படித்திட யாழ். இந்துவில் கூடினோம்*
*தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உதவிடவே*
*தொடர்ந்திட்டோம் தொடர் வகுப்புகளை*
*கூட்டலையும் கழித்தலையும் கூறிட்ட*
*டீ. எஸ். ஐயாவும் சங்கடமான*
*சரக்கு முதலைச் சந்தித்த வேளை*
*வாக்காளர் அட்டைகள் வரும் என*
*பாதிவழியில் விட்டு விலகிடவே*
*பாதைகள் காட்டி உதவிட வந்தார்*
*யோகராசா ஐயா அவர்கள்*
*விட்ட பணியைத் தொடர்ந்திட்டார்*
*ஒவ்வொருத்தரையும் தட்டிக்கொடுத்து*
*பாடம் புகட்டிட்டார் யோகராசா ஐயா*
*பதவிகள் பல கண்டு பட்டங்கள் பெற்றிட*
*இறைவன் துணைநிற்க*
*வாழி நீங்கள்.*
*அஞ்சல் நடைமுறைகளை அறிமுகஞ்செய்திட்ட*
*துரைசிங்கம் ஐயாவையும் நன்றி கூறுகின்றோம்.*
*தெரியாத பல அஞ்சல் விடயங்களை*
*புன்சிரிப்புடன் புகட்டிட்டார் சுந்தரலிங்கம் ஐயா*
*சுட்டு விரலைப் பட்டுப்பட்டென நீட்டியே*
*வெட்டு வெட்டு எனக் கேள்விக் கணைகளை*
*தொடுத்திடுவார் சுந்தரலிங்கம் ஐயா*
*அநுபவப் பாடங்களையும் அப்ப அப்ப*
*சொல்லி சொல்லி வியக்கவும்*
*வைத்திடுவார் சுந்தரலிங்கம் ஐயா*
*கண்ணாடியின் ஊடே*
*அங்கும் இங்கும் ஊடுருவியும்*
*கள்ளத் தனம் புரிபவர்களை*
*கண்டும் பிடித்திடுவார்*
*உங்களது பரந்த மனப்பாங்கிற்கும்*
*நீங்கள் நீடூழி காலம் வாழி.*
*மதிய வேளையின் பின்.....*
*சாப்பிட்ட களைப்புத் தீரவும்*
*சாப்பிடாமல் இருப்பவர்கள்*
*களைக்காமல் சளைக்காமல் இருக்கவும்*
*அமிழ்தினுமினிய தமிழும் புகட்டிட்டார்*
*ஜெயகாந்தன் ஐயா அவர்கள்*
*நீடூழி காலம் வாழி வாழி!*
*ஆற அமர இருக்காமலும் ஓய்வின்றியும்*
*உற்றார், உறவினர், நண்பர்களின்*
*இன்ப துன்பங்களில் பங்கேற்றிட முடியாமலும்*
*எமக்காக நாங்கள் முன்னேறிட*
*முன்னேற்றிவிட்ட உதவி செய்திட்ட*
*அறுபத்தொரு பேர் உயர்ந்திட*
*நீவிர் தான் காரணம்.*
*அஞ்சலின் ஆசான்களே நீடூழிகாலம் வாழி!*
*எந்தவிதமான பிரதியுபகாரமும் எதிர்பாராமல்*
*பாடங்கள் புகட்டிட்ட அஞ்சலின்*
*ஆசான்களுக்கு இந் நன்னாளில் நன்றி கூறுகின்றோம்.*

(கவிதை: மாதகல் கமலா)

***அஞ்சல் அதிபர் தரம் II பதவி உயர்வுக்கான வகுப்புகளை எந்தவித பிரதியுபகாரமும் எதிர்பாராமல் பாடம் புகட்டிட்ட அஞ்சலின் ஆசான்களான***

1. திரு. S. சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)
2. திரு. A. துரைசிங்கம் (அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்)
3. திரு. A. சுந்தரலிங்கம் (பிரதேச நிர்வாகம், UPTO தலைவர், யாழ்ப்பாணம்)
4. திரு. S. ஜெயகாந்தன் (பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் அலுவலகம், யாழ்ப்பாணம்)
5. திரு. G. யோகராசா (தபாலகம் - சங்கானை)
6. செல்வி நாகமணி முத்துப்பிள்ளை (தபாலகம், சுன்னாகம்)

***இவ்வகுப்புகளை ஒழுங்குசெய்து தந்தவர்கள்***

1. திரு. M. சண்முகம் (ஓய்வுபெற்ற தபாலதிபர் வட்டுக்கோட்டை, அஞ்சல் தொலை தொடர்பாடல் சங்கம்)
2. திரு. S. சுப்பிரமணியம் (உப-தபாலதிபர்-பலாலி, உப-தபாலதிபர்களின் தொழிற்சங்கத் தலைவர்)
3. திரு. S. மோகன்ராஜ் (தபால் ஊழியர்களின் தொழிற்சங்கத் தலைவர்)

வகுப்புகளை நடத்த இடந்தந்த யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. ஸ்ரீகுமரன்.

***மேலே குறிப்பிடப்பட்டவர்களுக்கு இந்நன்னாளில் நன்றி உணர்வுகளைத் தெரிவிப்பவர்கள்:-***

1. திருமதி ராகினி ரவீந்திரன் (தாவடி)
2. திருமதி சத்தியா நந்தகுமார் (மாரீசன்கூடல்)
3. செல்வி கமலேஸ்வரி பத்மநாதன் (மாதகல்)
4. திரு. பேரின்பம் இன்பராஜா (பண்ணாகம்)
5. திரு. நல்லையா ஆனந்தராஜா (யாழ்ப்பாணம்)
6. திரு. சீவரட்ணம் சுந்தரவேல் (அச்சுவேலி)
7. செல்வி சத்தியபாமா தம்பையா (சோனகதெரு)
8. செல்வி சுமித்திராவதி யேசுதாசன் (கரம்பொன் தெற்கு)
9. செல்வி நளாயினி விநாயகமூர்த்தி (தனங்களப்பு)
10. செல்வி சோமசவுந்தரி இராசாயை (துன்னாலை)
11. செல்வி சி. சுகந்தி (கொக்குவில்)
12. செல்வி த. கௌசல்யாதேவி (இடைக்காடு)
13. திருமதி ஐயாத்துரை சகுந்தலாதேவி (கைதடி வடக்கு)
14. திரு. ந. கமலேந்திரன் (சிறுப்பிட்டி)

(15727)

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## வித்துவான் கந்தசாமி குகதாசன்

(ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி)

**திதி: துதியை 20.03.2003**

பூவுலகில்: 17.04.1925 புகழுலகில்: 18.02.2003

18.02.2003 செவ்வாய்க்கிழமை மாசி மாத அபரபக்கத் துதியைத் திதியில் இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர் ப.க.குகதாசன் *(பண்டிதர், வித்துவான், ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி - 5ஆம் வட்டாரம், நயினாதீவு)* அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு நயினாதீவு கங்காதரணி தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய வைபவம் எமது இல்லத்திலும் நடைபெறும்.

அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கலந்து சிறப்பிக்குமாறு பணிவுடன் அழைக்கின்றோம்.

எமது குல தெய்வத்தின் மறைவின்போது எமது இல்லத்திற்கு வருகைதந்து, அஞ்சலி செலுத்தி, ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றிய அன்பர்களுக்கும், தந்திமூலமும், பத்திரிகைகள் வாயிலாகவும், கடிதங்கள் மூலமும் அனுதாபச் செய்திகளை வழங்கி கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், நயினாதீவு சகல பாடசாலைச் சமூகத்தினருக்கும் மற்றும் எமக்கு பல வழிகளில் உதவியவர்களுக்கும், தலைவரை இழந்து தத்தளித்த வேளையில் எமை ஆற்றுப்படுத்திய அனைத்து அன்புள்ளங்களுக்கும் எங்கள் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நயினாதீவு.* (சி-37007) - **குடும்பத்தினர்.**

# தென்மராட்சியில் மீள் குடியமர்வு கொடுப்பனவு

தென்மராட்சி,மார்ச்20

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த மேலும் 18 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 3ஆயிரத்து 62 குடும்பங்களுக்கு உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவான ரூபா 25ஆயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பதிவுகள் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவினர், தென்மராட்சிப் பிரதேச செயலகத் திட்டமிடல பிரிவினர் ஆகியோரால் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் அந்தந்த கிராம அலுவலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி வடக்கு, மண்டுவில், கல்வயல், கைதடி - நுணாவில, தென்.மட்டுவில், மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு, கரம்பைக்குறிச்சி, வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலை, மந்துவில் கிழக்கு, மந்துவில் மேற்கு, மந்துவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த மாதம் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த ஆயிரம் குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-117)


**விற்பனையாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் வநாயகர் புடைவை அகம் விற்பனை நிலையத்திற்கு ஆண் விற்பனையாளர் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

காலை 10 மணிக்குப் பின் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விநாயகர் புடைவை அகம்**

62¹, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15721)

**மலிவு விற்பனை**

20% முதல் 50% வரை கழிவு

புதுக்கணக்குப் போட இருப்பதால் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணனி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றன.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்!

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C/26949)

Sats-Tech KTV SCV SUN NEWS SUN TV

வடபகுதி கேபிள் T.V. இயக்குநர்கள் மற்றும் செய்மதி அன்ரனா மூலம் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கும் அனைவருக்கும் Sats-tech தரும் நற்செய்தி K T.V., SUN NEWS, SCV சனல்களை கண்டுகளிக்கக்கூடிய Decorder Smart Card தேவையானவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். அத்துடன்

சண் ரீ.வி. K T.V. SUN நியூஸ் SCV (மற்றும் All freeto Air)

Smart Package:-Rs. 50,000 Only (Including Dish Antenna/ LNBF / Decorder Smart Cart / One Year Viewing Charge and All other Charges)

**Sats-Tech....Trusted name of this field**

*மேலதிக விபரங்களுக்கு :*

**Sats-Tech Engineers**

**M/S National Video Centre,**

182, K.K.S. Road *(Near Kulapity Church),* Kokuvil.

**Phone : 0777710785**

(15687)


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்**

**தினம் ஒரு பரிசு - 39**

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23.03.2003) நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் ஆஸ்திரேலிய அணியில் அதிக ஓட்டங்களைப் பெறும் வீரர் யார்?

முழுப்பெயர் : ........................................

முகவரி : ........................................

அ. அட்டை எண்: ........................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (21.03.2003) நண்பகல் 1மணிக்குள் தினம் ஒரு பரிசு - 39 , உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

'அருண்ஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்






**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல்நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம வழங்கும் 100ரூபாவுக்கான கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27 ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

# ஸ்கந்தா, நெல்லியடி சென்ரல் உதைபந்தாட்ட சம்பியன்கள்!

யாழ்ப்பாணம்,மார்ச்20

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 18, 16 வயதுப் பிரிவுகளில் முறையே ஸ்கந்தவரோதயக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியன இவ்வாண்டுக்குரிய சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

இவ் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

18வயதுப் பிரிவினருக்கிடையேயான இறுதியாட்டத்தில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியும் மோதின. முதல் பாதி ஆட்டத்தின் போது இரு அணிகளுக்கும் கோல்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்த முதலாவது நிமிடத்திலேயே ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது. அடுத்த நான்காவது நிமிடத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு கோலைப் பெற்றது. இதன பின்னர் இரு அணிகளுமே மேலதிக கோல்களைப் பெறமுடியவில்லை.

மேலதிகமாக வழங்கப்பட்ட கோல்டன் கோல், நேரத்தின் முதல் ஐந்து நிமிடங்களில் இரு அணிகளும் கோல் எதனையும் பெறவில்லை. ஆட்டம் முடிவடைய ஒரு நிமிடம் இருக்கும்போது ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஒரு, கோல் அடித்தது.

இதனால் 2:1 என்ற கணக்கில் சம்பியன் கிண்ணத்தை ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுவீகரித்தது.

16 வயதுப் பிரிவினருக்கு இடையிலான இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும், கொற்றாவத்தை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையும் மோதின.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் இரு அணிகளும் கோல்களைப் பெறும் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்ட போதிலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 9ஆவது நிமிடத்தில தனது முதலாவது கோலைப் பெற்றது.

முதல்பாதி ஆட்டம் முடிவடையும் வரை இரு அணிகளும் மேலதிகமான கோல்கள் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கிய 9ஆவது மற்றும் 16 ஆவது நிமிடங்களில் மேலும் இரண்டு கோல்களை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம அடித்து தனது வெற்றியை உறுதி செய்துகொண்டது.

இறுதி ஒரு நிமிடம் இருக்கும் போது கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை ஒரு கோலைப் பெற்றுக் கொண்டது. இதனால் 3-1 என்ற கோல கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் 16 வயதுப் பிரிவில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

(ஒ-5-86)

## இரண்டாவது...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தியது கென்யா.

இதனால் இன்றைய போட்டியை இலகுவானதாகக் கருதமுடியாத நிலையில் இந்திய அணி உள்ளது. தம்மால் இந்திய அணியை தோற்கடிக்கமுடியும் என கென்ய அணியின் பயிற்றுநரான இந்தியாவின் சந்தீப் பட்டீல் கூறுகிறார்.

இதேவேளை - "இவ் ஆட்டத்தில் நாம் இழப்பதற்கு எதுவும் இல்லை. தனது புகழைத் தக்கவைத்துக்கொள்வதற்காக இவஆட்டத்தில் வென்றே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இந்தியாவுக்குத்தான் உள்ளது."

- இவ்வாறு கென்ய அணித் தலைவர் ஸ்ரீவ் ரிக்கோலோ கூறியுள்ளார்.

இவஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எதிர்வரும் ஞாயிறன்று இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவுடன் மோதவுள்ளது.

'இந்திய அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் திறமையாகப் பந்துவீசி இந்திய வீரர்களுக்கு நெருககடியை ஏற்படுத்துவேன்' என்று கென்ய அணியின் சிரேஷ்ட வீரர் ஆஷிவ் கரீம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டேர்பனில் நடைபெறும் இப்போட்டியில் தனது சுழற்பந்து வீச்சுமூலம் இந்திய வீரர்களை திணறடிக்கப் போவதாக சவால் விட்டுள்ளார் ஆஷிவ் கரீம. 'சுப்பர் சிக்ஸ்' சுற்றில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக திறமையாகப் பந்துவீசி, ஆஸி. துடுப்பாட்ட வீரர்களை கதிகலங்கச் செய்தார் கரீம். டேர்பனின் இதே ஆடுகளத்தில் நடைபெற்ற அப்போட்டியில் அவர் 8.2 ஓவர்களில் 7 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 மெய்டின் ஓவர்களை வசி, ஆஸி. அணியின் முக்கிய வீரர்கள் மூவரை ஆட்டமிழக்கச் செய்தார். இந்தியாவுக்கு எதிராகவும் சிறப்பாக பந்துவீச முடியும் என்று நம்புகிறார் கரீம். (ம)

## பாகிஸ்தான்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகக் கிண்ணப் போட்டியின் பினனர் அணியை மீளக் கட்டியெழுப்பும் பணியாக இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைப் பேச்சாளர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் சார்ஜாவில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்கா, இலங்கை அணிகளுடனான முத்தரப்பு ஒரு நாள் போட்டிக்கு பாகிஸ்தான் அணிக்கு 34வயதான ரஷீட் லத்தீப் தலைமை தாங்குவார்.

"இந்த இக்கட்டான நிலையில் அணிக்கு தலைமை தாங்கும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அணியின் மூத்த வீரர்கள் ஆட்டத்தில் முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதே எனக்குத் தேவை"

- என்றார் லத்தீப்.

புதிய தலைவராக அறிவிக்கப் பட்ட பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இக்கருத்தைத் தெரிவித்தார்.

(ம)

## சைமன்ஸின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 48 ஓட்டங்களால் ஆஸ்திரேலியா வென்றது தெரிந்ததே.

அந்த வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே பொன்ரிங் இப்படித் தெரிவித்தார்.

"வெற்றிக்கு சைமன்ஸின் ஆட்டமே காரணம். இதற்காக அவரை நான் பாராட்டுகின்றேன். எங்கள் அணிக்கு சவால் அதிகரித்த நிலையில் சரியான தருணத்தில் சைமன்ஸ் தன் திறமையை வெளிப்படுத்தினார்.

"இலங்கை அணியின் விக்கெட்டுக்களை ஆரம்பத்திலேயே வீழ்த்தி நெருக்கடியைக் கொடுத்து விட்டோம்"

- என்றார் பொன்ரிங்.

தமது அணியின் தோல்வி குறித்து ஜயசூரிய கூறுகையில், ஆஸ்திரேலியாவைத் தோற்கடிக்க எமக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால், துடுப்பாட்ட வரிசை மீண்டும் மோசமானது. நடுவரிசை துடுப்பாட்டம் நம்பிக்கை தரும் விதத்தில் செயற்படவில்லை. இது ஏமாற்றத்தைத் தந்தது.

அரையிறுதி வரை நாம் வந்ததே எமக்கு மகிழ்ச்சிதான். இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெல்வதற்கு என் வாழ்த்துக்கள் என்று தெரிவித்தார்.

(ம)



யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி கிரிக்கெட் அணிகளுக்கு இடையே கடந்த வாரம் நடைபெற்ற 'வடக்கின் பெரும் மோதல்' போட்டியில் சிறந்த வீரருக்கான வெற்றிக் கேடயத்தை ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் வழங்கியது.

ஜனசக்தி காப்புறுதி- நிறுவன முகாமைத்துவ பணிப்பாளர் சி.ரி.ஏ.சாப்ரர், வெற்றிக்கேடயத்தை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் எ.தனஞ்செயனுக்கு வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். (ஐ)

## இனி இவர்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற 92 ஓட்டங்கள் மிகமிக அற்புதமானவை. இலங்கை வீரர்கள் அனைவரும் சுருண்டு மடிந்து போக தனித்து நின்று ஆஸியை மிரட்டிய தனிமனிதர் அவர். அரையிறுதியிலும் அவரது 'ரன் அவுட்'தான் திருப்புமுனையாக இருந்தது.

அவர் நின்றிருந்தால் ஆட்டம் எப்படி வேண்டுமானாலும் திரும்பியிருக்கலாம். அதை மறுப்பதற்கு எவரும் இல்லை.

இலங்கையின் கிரிக்கெட் வரலாற்றில் மிக அற்புதமான வீரர் அவர். ஒரு நாள் கிரிக்கெட்டில் மிக அதிக் ஓட்டங்களைக் குவித்த வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடம் அவருக்கு. டெண்டுல்கரும் அஸாருதீனும் அவருக்கு முன்னாலுள்ள இருவர்.

அவரது முழுப்பெயர் பின்துவே அரவிந்த டி சில்வா. வலதுகை மட்டைவீச்சாளர். வலதுகை 'ஓவ் பிரேக்' பந்துவீச்சாளர். 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நியூஸிலாந்துக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் அறிமுகமானார். இதுவரை 308 ஆட்டங்களில் 9,284 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 34.9 அவரது துடுப்பாட்டச் சராசரி. 106 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார்.

மிக முக்கிய தருணங்களில் பந்துவீச்சு மூலம் அணிக்கு கைகொடுத்துள்ளார். அணி திணறிய சமயங்களில் துடுப்பாட்டம் மூலம் தூக்கி நிறுத்தியுள்ளார். அடித்தாடுவது இவரது விசேடம்.

1984 ஓகஸ்டில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமானார். 93 ஆட்டங்களில் 6,361 ஓட்டங்கள் பெற்றுள்ளார். சராசரி 42.98. உலகக் கிண்ணப் போட்டிகளில் 35 ஆட்டங்களில் 1,064 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

அவரது அழகான ஆட்டம் நேற்று முன்தினத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது. இலங்கை அணியின் மிகச் சிறந்த வீரரான அவருக்கு ரசிகர்கள் மததியில் என்றுமே அபிமானம் இருக்கும்.

-PTP

## இந்தியாவின்...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தன. ஆனால் நினைத்ததற்கு மாறாக அந்த அணி தீர்மானமாகவும் முழு ஈடுபாட்டுடனும் விளையாடி வருகிறது.

சச்சின் மிக உச்சத்தில் இருக்கிறார். வலுவாகவும் திறமையாகவும் விளையாடி ஓட்டங்களைக் குவித்து வருகிறார் யுவராஜ் போன்ற இளைய வீரர்களும் நன்கு ஆடுகிறார்கள். அந்த அணியில் 7 துடுப்பாட்ட வீரர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் ஆட்டமிழக்கச் செய்வது சாதாரண விஷயம் அல்ல.

அந்த அணியின் பந்துவீச்சும் ஆஸ்திரேலிய அணியின் பந்து வீச்சும் இணையாக இருக்கிறது. ஸ்ரீநாத், சஹீர்கான், நெஹ்ரா ஆகியோரின் பந்துவீச்சுக்கு தலைவணங்குகின்றோம் - என்றார்.

(ம)

## தங்க...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தொடரில் தற்போது எஞ்சியிருப்பவர்களில் டெண்டுல்கருக்கு போட்டியாக உள்ளவர் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலிதான். அவர் 7 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஆட்டநாயகன் பட்டம் வென்றால் 3புள்ளிகளும் சிறந்த பெறுபேற்றைப் பெறும் மேலும் இருவருக்கு முறையே இரண்டு புள்ளிகள் அல்லது ஒரு புள்ளி கிடைக்கும் கென்யாவுக்கு எதிரான போட்டியில் ஆட்ட நாயகன் விருதை சச்சின் கைப்பற்றுவாரேயானால் மொத்தமாக 16 புள்ளிகளைப் பெறுவார். அதனால் தொடரின் நாயகன் விருதையும் அவர் பெறுவார்.

(ம)


# வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வே - து)

## கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

22.03.2003

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20 - 02 இன்படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்வதற்காக இச்சங்கத்தின் எல்லாக் கிளைகளினதும் பொதுச்சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 09 இற்கமைய கீழ் குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என்பதை எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. ஆகவே, தயவுசெய்து கிளைப் பொதுச் சபைக்கூட்டங்களுக்கு சமுகமளிக்கத் தகைமைபெற்ற உறுப்பினர்கள் யாவரும் அந்தந்தக் கிளைகளின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்குத் தவறாது சமுகமளித்து கிளைக்குழுக்களைத் தெரிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம்: 2003.03.22 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி.

கூட்டம் நடைபெறும் இடங்கள் - விவரம் கீழ்வருமாறு:

| தொ இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 83 | புங்குடுதீவு மேற்கு | புங்குடுதீவு மேற்கு கடற்றொழிலாளர் கூ. சங்கம் | திரு. ஆர்.புவன்ராஜ் கூ.ப. |
| 02 | 85 | புங்குடுதீவு கிழக்கு | புங்/ சர்வோதயம் முன்பள்ளி நிலையம் | திரு. க.குகதாஸ் கூ.ப. |
| 03 | 86 | வேலணை கிழக்கு | காட்டி மாதா கோயில் பாடசாலை மண்டபம் | திரு.ஐ.நாகேஸ்வரன். கூ.ப. |
| 04 | 87 | வேலணை வடக்கு | வேலணை வடக்கு சுடரொளி ச.ச. நிலையம் | திரு. சு.கணேசு கூ.ப. |
| 05 | 88 | வேலணை மேற்கு | திருவள்ளுவர் ச.ச. நிலையம், வேலணை மேற்கு | திரு.வி.கே.அருந்தவநாதன் கூ.ப. |
| 06 | 89 | வேலணை தெற்கு | வேலணை மேற்கு விவசாய சம்மேளன காரியாலயம் | திரு.எம்.எஸ்.சண்முகநாதன் கூ.ப. |
| 07 | 90 | அல்லைப்பிட்டி | அல்லைப்பிட்டி முன்பள்ளி நிலையம் | திரு. ரி.என்.ராஜா கூ.ப. |
| 08 | 92 | நயினாதீவு | நயினாதீவு அம்பிகா ச.ச.நிலையம் | திரு.ஆர்.விஜயமோகனராஜா கூ.ப. |

சு.கணேசமூர்த்தி
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (பதித.),
யாழ்ப்பாணம்.

(15756)



# கண்ணீர் அஞ்சலி

## முத்துக்குமார் மயில்வாகனம்

(கிராம அலுவலர் - J/96)

அரியாலையைச் சேர்ந்த கிராம அலுவலர் கு.மயில்வாகனம் அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கியிருக்கும் குடும்பத்தாருடன் நாமும் துயரினைப் பகிர்கின்றோம்.

நல்லூர்.

பிரதேச செயலகமும்,
கிராம அலுவலர்களும்.

(15748)



# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி செல்வராணி

வன்னியர் கோவிலடி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி செல்வராணி நேற்று (19.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் சுதாகரனின் (கனடா) பாசமிகு தாயாரும் துரைராசா, பொன்னம்பலம், காலஞ்சென்ற செல்வராசா மற்றும் யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி இராசலட்சுமியின் மைத்துனியும் சுமித்திரா, நகுலேஸ்வரி, நகுலேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.03.2003 சனிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

தகவல்.
செ.கந்தசாமி
(கணவர்)

(15763)

# வாகனம் மோதி பெண் காயம்!

தென்மராட்சி,மார்ச்20

வீதியைக் கடக்க முயன்ற பெண் வாகனத்தினால் மோதுண்டு படுகாயமடைந்தார்.

சம்பவம் நேற்றுக்காலை சாவகச்சேரி தபால்கந்தோர் வீதிச் சந்தியில் இடம்பெற்றது.

இப்பெண்மணி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த அருந்தவநாயகி மகேந்திரம் (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார்.

இவரை மோதிய வாகனம் தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது.

(ஒ-117)

## பசளை தயாரிப்பு பயிற்சி வகுப்பு

விவசாயப் பயிர்ச்செய்கைக்கான கூட்டுப்பசளை தயாரிப்பது குறித்த பயிற்சி வகுப்பு இன்று காலை திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

கூட்டுப்பசளை தயாரித்தல் மற்றும் பயன்படுத்தல் சம்பந்தமான பயிற்சியைப் பெற விரும்புபவர்களை இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-86)


## பணியாளர்கள் தேவை

பின்வரும் வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

- சிட்டை எழுதுநர் (பில் கிளார்க்)
- பரிமாறுபவர்கள் (வெயிட்டர்)
- பாதுகாவலர்
- கொத்துறொட்டி தயாரிப்பவர்
- தோட்ட வேலையாள்

விரும்புவோர் நாளை (21.03.2003) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் சமுகந்தரவும்.

**மில்லேனியம் றெஸ்ரோறன்ற்**

*70, இராமநாதன் வீதி,*
*கலட்டி, யாழ்ப்பாணம்.*

(15758)



## பாராட்டும் வாழ்த்துக்களும்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 6ஆவது துணைவேந்தராகப் பதவியேற்ற
அரியாலை மைந்தன் பேராசிரியர்

### சுப்பிரமணியம் மோகனதாஸ்

**B.Sc. HONS (S.L.), Ph.D.(ADELAIDE), C.CHEM, F.I.CHEM.C**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது பதவிக்காலத்தில் யாழ்.பல்கலைக்கழகம் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து மிளிர அரும்பணியாற்றுவதுடன், அவர் தனது சேவையை கல்விச் சமூகத்திற்கும் வழங்கி யாழ்ப்பான கல்விப் பாரம்பரியத்தை நிலைநாட்ட வழி காட்டியாக விளங்கவேண்டுமென அரியாலை மக்கள் சார்பில் வேண்டி நிற்கின்றோம்.

*அரியாலை மக்கள் சார்பில்:*

அரியாலை ஐக்கிய கழகம், அரியாலை அபிவிருத்திச் சங்கம், அரியாலை சுதேசிய திருநாள் விழா நிர்வாகம், அரியாலை சைவ ஆலயங்களின் நிர்வாகங்கள், அரியாலை சனசமூக நிலையம், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை திருமகள் சனசமூக நிலையம், அரியாலை அருணோதயா சனசமூக நிலையம், அரியாலை கலைமகள் சனசமூகநிலையம், நல்லூர் தெற்கு சனசமூக நிலையம், கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம், அரியாலை கலாமன்றம், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான சபை, அரியாலை விவசாய சம்மேளனம், அரியாலை இளைஞர் இந்து மாமன்றம், அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம், அரியாலை சரஸ்வதி சிக்கன கூட்டுறவு கடனுதவிச் சங்கம்.

(சி-37021)



## விற்பனைக்கு

ISUZU JOURNEY (L) மொடல் 1987 Full A/C BUS (சகல வசதிகளுடன் கூடியது) விற்பனைக்குண்டு.

*நேரில் பார்வையிடுவதற்கு:*

23.03.2003 அன்று காலை 9மணிமுதல் மாலை 6மணிவரை:

*No.11, 40th lane,*
*Rajasinghe Road,*
*Wellawatte,*
*Colombo-06.*

*தொடர்புகளுக்கு:-* **M.Thufail**
0777-760820

(15747)



சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ-து) சுன்னாகம்

## அறிவித்தல்

**பாடசாலை மாணவர்களுக்கான சீருடை விநியோகம்**

மேற்படி விநியோகம் 20.03.2003 இலிருந்து 25.03.2003வரை கீழ்க் காட்டப்பட்ட நிலையங்களில் நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

| இடம் | இணைக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவு இல. |
|---|---|
| சுன்னாகம் மத்திய சந்தை புடைவை விற்பனை நிலையம் 1ஏ | 185, 186, 187, 195,196, 197, 198, 199, 200. |
| இணுவில் சந்தியடி, புடைவை விற்பனை நிலையம் 15ஏ | 182, 183, 184, 188, 189, 190, 191, 192, 193, 194. |
| குப்பிழான், கிளை இல. 20 | 201, 202, 203, 204, 205, 206, 207, 208, 209, 210, 211. |

*சுன்னாகம் பல நோ.கூ.சங்கம்,*
*சுன்னாகம்.*
*15.03.2003*

(C/37014)

பொதுமுகாமையாளர்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 458 |
|---|---|
| திகதி | 18.03.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல.
4821454-4833650

**வெற்றி இலக்கங்கள்** 09 16 30 51



**லக்கினம்** சிங்கம்

**ஜக்பொட் பரிசு ரூபா. 4,580,900/- வெல்லப்படவில்லை**

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **5,140,500/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 250,698 | 10 | 2,506,980 |
| 2 இலக்கங்கள் | 22,978 | 20 | 453,560 |
| 1 இல + லக்கினம் | 22,640 | 30 | 679,200 |
| 2 இல + லக்கினம் | 2,132 | 100 | 213,200 |
| 3 இலக்கங்கள் | 621 | 500 | 310,500 |
| 3 இல + லக்கினம் | 60 | 5,000 | 300,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | - | 4,580,900 | - |
| மொத்தம் | 299,132 | - | 4,769,440 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **4,769,440/-**

தொடர் இல. 5811887க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 21ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4829573-8-59
4830271-9-32
4822504-6-79
4825608-8-17
4830953-4-97

**அபிவிருத்தி லொத்தர் சபை**
இல. 33, சேன்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.



## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா தங்கராசா

*(இளைப்பாறிய அதிபர். யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை. பருத்தித்துறை)*

அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், தும்பளையை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபர் செல்லப்பா தங்கராசா அவர்கள் 18.03.2003 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லப்பா (ஆசிரியர்) அவர்களின் கனிஷ்ட புத்திரனும் அருந்தவநாயகியின் அன்புக் கணவரும் குமாரதாஸன் (பலாலி ஆசிரியர் கலாசாலை), பிறேமதாஸன் (ASST.-QUANITTY SERVEYER BAHRAIN), தேவதாஸன் (தமிழீழ காவல்துறை) ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையாரும் அமரர் நடராசா மற்றும் செல்வராசா (இளைப்பாறிய அதிபர், யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், அல்வாய்), துரைராசா (இளைப்பாறிய அதிபர், யா/துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை), காலஞ்சென்ற தவமணி மற்றும் தயாமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தேவகி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனாரும் திலீபன், ஜனகன், லோஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தும்பளை வீதி,*
*பருத்தித்துறை.*

(15753)

தகவல்:
த.குமாரதாஸன்
(மகன்)

### சுப்பையா தயானந்தம்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா தயானந்தம் அவர்கள் நேற்று (19.03.2003) புதன்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பொன்னம்மாவின் அன்பு மகனும் ஜெயசுதா, சுரேஸ்குமார் (பிரான்ஸ்), யசோதா, கல்ப்பனா, பிரதீபன் ஆகியோரின் தகப்பனும் காலஞ்சென்ற பரமானந்தன், விமலாதேவி, வசந்தமாலா, நித்தியானந்தன், விவேகானந்தன், காலஞ்சென்ற பேரானந்தம், வசந்தாதேவி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராமர், பூரணம் ஆகியோரின் மருமகனும் நாகேஸ்வரி, புவநேஸ்வரி, கமலா, பரமேஸ்வரி, யோகநாதன், பத்மநாதன், பிறேமா (ஜேர்மன்), இலங்கநாதன் (கனடா), பாமா (சுவிஸ்), மதி, அன்னலக்ஸ்மி, ஆனந்தராசா (புதுக்குடியிருப்பு), சிதம்பரநாதன், ராயு (ஓமான்), செல்வராணி, சந்திரவதணி, சாந்தி ஆகியோரின் மைத்துனரும் ஜெயராசாவின் (புதுக்குடியிருப்பு) அன்பு மாமனாரும் விது, மது ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பகல் 11 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகாமி அம்மன் கோவிலடி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(15757)

தகவல்:
விவேகானந்தன்
(சகோதரன்)

## ஈராக் போர் விவகாரம்:

# அமெரிக்காவின் முடிவுக்கு எதிர்ப்பு வலுக்கின்றது!

உலக அரங்கில்

நியூயோர்க்,மார்ச்20

ஈராக் மீது போரதொடுக்கும் அமெரிக்காவின் திட்டத்தை பிரான்ஸ், ரஷ்யா, சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் மிகக் கடுமையாக எதிர்த்துள்ளன. ஆனால், பிரிட்டன், ஸ்பெயின், அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஆதரித்துள்ளன.

அரபு நாடுகள் அமைப்பும் அமெரிக்காவின் போர் அறைகூவலைச சாடியுள்ளன. அமெரிக்காவின் சர்வதேச சட்டங்களுக்கு எதிராகப் போர் தொடுக்க அமெரிக்கா முயல்கின்றது என்று அந்த நாடுகள் கூறியுள்ளன.

ரோமில் உள்ள போப்பாண்டவர் ஜோன் போலும் அமெரிக்காவின் போர் வெறியைக் கடும் கண்டனம் செய்துள்ளார். அமைதியைக் கொண்டுவர போர் உதவப்போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஜப்பான் ஆதரித்துள்ளது. அதிபர் புஷ் ஈராக்குக்கு விதித்துள்ள நிபந்தனை கடுமையானதாகத் தோன்றலாம். எனினும் இதில் அமெரிக்காவின் நிலையை நாம் ஆதரிக்கின்றோம் என்றார் ஜப்பான் பிரதமர் கொய்ஷுமி.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனுக்கு அமெரிக்கா விதித்துள்ள காலக்கெடு சரியானதே என்று தாய்வான் கூறியுள்ளது. போருக்கு தமது வான்வெளியைப் பயன்படுத்திக்கொள்ளவும் தாய்வான் அமெரிக்காவுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

ஆனால், ஐ.நாவின் அனுமதி இன்றி ஈராக் மீது போர் தொடுப்பது சட்டவிரோதமானது; ஐ.நா. மீதான நம பிக்கையை சீர்குலைத்துவிடும் என்று இந்தோனேஷியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

சதாமுக்கு அமெரிக்கா விதித்துள்ள காலக்கெடுவை அரபு லீக்கும கடுமையாகச் சாடியுள்ளது. அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்றும அது கூறியுள்ளது.

ஐ.நா. ஆயுதச் சோதனையாளர்களுக்கு ஈராக் அளித்த ஒத்துழைப்பை உலக நாடுகள் பலவும் ஏற்றுள்ளன. இந்நிலையில் ஈராக்கை விட்டு சோதனையாளர்களை வெளியேறுமாறு பொதுச் செயலர் கோபி அனான் உத்தரவிட்டது கவலையளிப்பதாக உள்ளது என்று அரபு லீக் தெரிவித்தது.

ஜெனீவாவில் உள்ள சர்வதேச நீதிபதிகள் ஆணைக்குழுவும் அமெரிக்காவின் தாக்குதல் திட்டத்தை கடுமையாகக் கண்டித்துள்ளது. ஈராக்கை அமெரிக்கா தாக்கினால், அது ஆக்கிரமிப்பு யுத்தமாகவே கருதப்படும் என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (ம)

# போர்!

வாஷிங்ரன்,மார்ச்20

வளைகுடாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் துருப்புக்கள் எந்த நிமிடத்திலும் போரைத் தொடங்கும் முழு ஆயத்த நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

சதாம் ஹுசைன் நாட்டை விட்டு வெளியேற அதிபர் புஷ் வழங்கிய காலக்கெடு இன்று காலை இலங்கை நேரப்படி 7.00 மணிக்கு (ஜி.எம்ரி. நேரம் 1.00) முடிவடைகின்றது. அதற்கிடையில் அதிபர் சதாம் வெளியேறாவிட்டால் அமெரிக்கப் படையினர் தாக்குதலைத் தொடங்கிவிடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒரு லட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் துருப்புக்கள் ஈராக் மீது தாக்குதல் நடத்தும். கடலில் இருந்து ஏவுகணைத் தாக்குதல்களும், போர் விமானங்களின் சரமாரியான குண்டு வீச்சுத் தாக்குதலும் இடம்பெறும்.

தாக்குதலை ஆரம்பிப்பதற்கு வசதியாக துருக்கி மற்றும் குவைத்தி லுள்ள படைகள், ஈராக்கிய எல்லைகளின் ஓரம்வரை சென்றுவிட்டன. இனி, அதிபர் புஷ்ஷின் உத்தரவு ஒன்றே கிடைக்கவேண்டும். அது கிடைத்ததும் சரமாரியான தாக்குதல் ஆரம்பமாகும். போருக்கான 'கௌண்டவுன்' ஆரம்பமாகிவிட்டது.

இதனால் வளைகுடா முழுவதும் போர்ப் பதற்றத்தில் சிக்கித் தவிக்கிறது. எந்தநேரத்திலும் தாக்குதல் ஆரம்பிக்கப்படலாம் என்பதால் ஈராக்கிய மக்கள் உயிரைக் கையில் பிடித்தபடி உள்ளனர். (ம)

# அந்திரக்ஸினால் பேரபாயம் ஏற்படும்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

வாஷிங்ரன்,மார்ச்20

ஒரு கோடி சனத்தொகையைக் கொண்ட மிகப் பெரிய நகரம் ஒன்றில் அந்திரக்ஸ் தாக்குதல் நடத்தப்பட்டால் குறைந்தது ஒரு லட்சத்து 23ஆயிரம் பேர் உயிரிழப்பர் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடத்தப்பட்ட 24மணி நேரத்தில் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்படாவிட்டால் மரணமாவோரின் எண்ணிக்கை மேலும் மேலும் உயரும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்திரக்ஸ் தாக்குதல் நடத்தப்பட்டால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள் இந்த அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

ஸ்டான்போர்ட் மற்றும் யேல் பல்கலைக்கழகங்கள் மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இணைந்தே இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டனர். இந்த ஆய்வில் கலந்துகொண்டவர்களில் முக்கியமானவரான லோரன்ஸ் வீய்ன் தமது ஆராய்ச்சி குறித்துக் கூறியதாவது:-

தாக்குதலுக்கு முன்னரோ, பின்னரோ தடுப்பு நோய் மருந்து உட்கொண்டால் இறப்பு வீதம் குறையலாம். அப்படித் தடுக்க வேண்டும் என்றால் நோய்த் தடுப்பு மருந்துகளை உடன் மக்களுக்கு விநியோகிக்க வேண்டும். இதற்காக நடமாடும் வைத்திய நிலையங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

அந்திரக்ஸைக் கண்டுபிடிக்க உதவும் உபகரணங்களால் இழப்புக்களை ஓரளவே கட்டுப்படுத்த முடியும். இத்தகைய உயிரியல் தாக்குதலில் இருந்து மக்களைக் காப்பாற்ற அமெரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவை என்று கூறிவிட முடியாது - என்றார் வீய்ன். (ம)

# ஈராக் போருக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் அனுமதி!

லண்டன்,மார்ச்20

ஈராக்குக்கு எதிராகப் போர் தொடுப்பதற்கு பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஆதரவளித்துள்ளது. இந்த முக்கிய விடயத்தில் பிரதமர் ரொனி பிளயருக்கு அவரது கட்சியில் இருந்து அமோக ஆதரவு கிடைத்தது.

ஐ.நாவின் ஆதர்வு இல்லாமல் ஈராக்கைத் தாக்க அமெரிக்கா மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு பிளயர் ஆதரவு தெரிவித்துவந்தார். ஆனால், அதற்குக் கடும் எதிர்ப்புக்கள் கிளம்பின. அவரது அமைச்சரவையில் இருந்த இரு அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்கள்.

இதனால், எழுந்த நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காக ஈராக் போர் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டது. பின்னர் வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. ஆதரவாக 412 வாக்குகளும் எதிராக 149 வாக்குகளும் கிடைத்தன.

பிளயரின் அரசியல் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றி இது என்று கருதப்படுகின்றது.

ஈராக் அதிபர் சதாமும் அவரது புதல்வர்களும் ஈராக்கைவிட்டு வெளியேறுவதற்கு அமெரிக்க அதிபர் புஷ் 48 மணிநேரக் காலக்கெடு விதித்ததன் பின்னர், போருக்கு ஆதரவாக பிரிட்டிஷ் நாடாளுமன்றம் வாக்களித்துள்ளது. ஆனால், அதிபர் புஷ்ஷின் நிபந்தனையை சதாமும் அவர்களது புதல்வர்களும் நிராகரித்துவிட்டனர்.

ஈராக்மீதான போருக்கு தனது வடக்கு முனையை அமெரிக்கா பயன்படுத்த துருக்கி அனுமதி வழங்கிவிட்டது. தமது நாடாளுமன்றம் இதற்கான அனுமதியை வழங்கி விட்டதாக துருக்கிய அரசு தெரிவித்தது. எனினும் அந்த அனுமதி எப்போது வழங்கப்பட்டது என்று தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

முன்னதாக, ஐ.நா.அனுமதி இன்றி ஈராக் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், அதற்கு தமது விமானத் தளங்களையும் நிலப்பரப்பையும் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று துருக்கிய நாடாளுமன்றம் அறிவித்திருந்தது. இப்போது திடீரென அதன் நிலை தலைகீழாகியுள்ளது. தமது தளங்களை அமெரிக்கா பயனபடுத்த நாடாளுமன்றம் அனுமதித்துவிட்டதாக துருக்கிய அரசு கூறுகின்றது.


நாடாளுமன்றில் பிளயர்

இதேவேளை- தமது படையினர் ஈராக்குக்குள் நுழைந்து பேரழிவு ஆயுதங்களைத் தேட வேண்டிய தேவை உருவாகியுள்ளதாக அதிபர் புஷ்ஷின் பேச்சாளர் அரி பிளிஷியர் தெரிவித்தார். ஈராக் அதிபர் சதாம் இப்போது "கடைசித் தவறைச்" செய்துகொண்டிருக் கின்றார் என்றும் அவர் சொன்னார்.

ஈராக் தொடர்பான மற்றைய நகர்வுகள்:

☆ ஈராக்கில் உள்ள ஐ.நா. ஆயுதப் பரிசோதனையாளர்கள் எல்லோரையும் அங்கிருந்து மீளுமாறு குழுவின் தலைவர் ஹன்ஸ் பிளிக்ஸ் உத்தரவிட்டுள்ளார். இவர், போர் ஆரம்பித்தால் ஈராக் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தக்கூடும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

☆ அவசரகால நிலையின் கீழ் புதன்கிழமை காலையில் ஈராக்கிய நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட்டது.

☆ ஈராக் மீதான போருக்கான அதிபர் புஷ்ஷின் 'எதிர்கால கூட்டணிக்கு 45 நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆதரவு வழங்கியுள்ளதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் தெரிவித்தார். மேலும் 30 நாடுகள் புஷ்ஷின் இந்த முடிவு குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளன என்றும் அவர் சொன்னார்.

☆ ஸ்பானியப் பிரதமர் ஜோஸ் மரியா அஸ்நர் அதிபர் புஷ்ஷின் கொள்கைகளுக்கு தீவிர ஆதரவு தெரிவித்துள்ளார். ஆனால், ஸ்பெயின் வளைகுடாப் பகுதிக்கு தனது படைகளை அனுப்பாது என்றும் அவர் கூறியுள்ளார்.

☆ வெளிநாட்டு இராஜதந்திரிகள் மேலும் பலர் ஈராக் தலைநகர் பக்தாத்தைவிட்டு வெளியேறிவருகின்றனர். (ம)

## போருக்கான தயார்ப்படுத்தல்கள்

எல்லையில் தயார் நிலை.



போருக்குத் தயாராகும் ஈராக்கிய வீரர்கள்.



எந்நேரமும் முன்னேற ஆயத்தம்.



அமெரிக்காவில் தங்கியுள்ள அமெ. மற்றும் பிரிட்டிஷ் படையினர்.



# விளையாட்டு நிகழ்வுகள்

அரியாலை கிழக்கு அரசினர் தமிழ கலவன் பாடசாலை மற்றும் பூம்புகா அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றின் வருடாந்த மெய்வன் மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இருபாடசாலைகளின் அதிபர்களான திருமதி ப.அன்னலிங்கம், க.பரமேஸ்வரன் ஆகியோரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.ரி.பத்மநாதன் கலந்து கொள்வார். (ஒ-5)

☆ ☆ ☆

சண்டிலிப்பாய்,மார்ச்20

சண்டிலிப்பாய் (வலி. தென்மேற்கு) பிரதேச செயலர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளையும் நாளைமறுதினமும் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் இறுதிப்போட்டியிலும் பரிசளிப்பு வைபவத்திலும் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கலந்து கொள்வார். உதவிப் பிரதேச செயலர் ச.செல்வராசா தலைமையில இப் போட்டி நடைபெறும். (ம-135)



## இந்திய யாத்திரை

தென்னிந்தியா, ஆந்திரா, கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரியில் உள்ள 60 இற்கும் மேற்பட்ட புண்ணிய புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களை தரிசிக்கலாம். யாத்திரை நாள்கள் பாடசாலை விடுமுறை தினத்தை முன்னிட்டு ஏப்ரல் 25ஆம் திகதி தொடக்கம் 15 அல்லது 17 நாள்கள் வரை ஆகும். ஆர்வமுடையவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக விவரங்களுக்கு:
T.ஸ்ரீரெங்கநாதன்
T.P. 0777-680102

இந்த யாத்திரை சேவை நலன் கொண்டு ஒழுங்கு செய்யப்படுகின்றது. (C/37027)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அரியாலையூர் ஈன்றெடுத்த எம் அரும்பெரும் செல்வன்

**பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் மோகனதாஸ்**

அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக நேற்று பதவியேற்றதையிட்டு மிகமிக மகிழ்ச்சியுடன் அவரைப் பாராட்டி மனமார வாழ்த்துவதுடன் அவரின் சேவை மேன்மேலும் சிறப்புடன் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாகம்,
83 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா - 2003

*அரியாலை,*
*யாழ்ப்பர்ணம்.* (15766)

## பீடங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டி ~ 2003
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

| காலம் | நேரம் |
|---|---|
| 21.03.2003 | மாலை 01.30 - 06.30 வரை |
| 22.03.2003 | காலை 09.00 - 06.30 வரை |

இடம் :- யாழ். பல்கலைக்கழக மைதானம்

பிரதம விருந்தினா :- பொ.பாலசுந்தரம்பிள்ளை
சிரேஸ்ட பேராசிரியர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டு அவை — உடற்கல்வி அலகு
யாழ்.பல்கலைக்கழகம்
(C/37024)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை சிறீதரன்

புதுத்தோட்டம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிறீதரன் நேற்று (19.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் அபிஷனின் அன்புத் தந்தையும் கிருஷ்ணபிள்ளை சேதுப்பிள்ளையின் மகனும் குகதாஸன், நந்தினி, காலஞ்சென்ற தேவதாஸன் ஆகியோரின் சகோதரனும் வைரமுத்து, வள்ளிப்பிள்ளையின் மருமகனும் சுஜீவன், துர்க்காயினியின் மாமனாரும் ரதிதேவி, கிருஷ்ணமூர்த்தி, தேவராஜா ரூபி (கனடா), விஜயராசா (கொழும்பு), வாவா விமலம் (கொழும்பு), வேவிச்சந்திரன் (கனடா), ராஜேஸ், தாஸ் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆகாஸ், ஆமோஸ், தர்சன் (கனடா), துஸானா (கொழும்பு), சுதன் (கனடா), சயந்தன் (கொழும்பு), கோகுலன் (கனடா), லக்ஸன் (கனடா), இனேசிகா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரின் வசிப்பிடத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
யோகேஸ்வரி (மனைவி),
குகதாஸன் (சகோதரன்).

*புதுத்தோட்டம்,*
*தெல்லிப்பழை.* (15768)

## நெதர்லாந்து குழுவினர் வருவர்

இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் பிரதித்தூதர் தலைமையிலான குழு ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளது.

இக்குழுவினர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். அதன் பின்னர் குடாநாட்டின் பல்வேறு தரப்பினரையும் சந்திக்கவுள்ள இக்குழுவினர் பல இடங்களையும் சென்று பார்வையிடுவர். (ஐ-10)


**தேவை**

Computer Type Setting
செய்யக்கூடிய ஆள்கள்
உடனடியாகத் தேவை.
தொடர்பு :-
EXPO Computer Printing
*74, Palaly Road,*
*Thirunelvely.*
(15761)

**விற்பனைக்கு**

27 KVA ஜெனரேட்டர்
(PERKINS-ENGLAND)
விற்பனைக்குண்டு.
*தொடர்பு:*
கொனிக்கா கலர் லாப்
14, ஸ்ரீவெங்கடேசன் வீதி,
(பெருமாள் கோயில் அருகில்)
யாழ்ப்பாணம்.
(C/37023)

**CHEMISTRY CENTRE**

பலாலி வீதி, கந்தர்மடம்.
"ORGANIC"
Mon., Fri., 5 -6 p.m.
"CHEMISTRY PAPER"
Mon., Fri., 6 -7 p.m.
By:- அன்பழகன்
A/L 2003
CHE - Mon., Fri. 3-4 p.m.
PHY - Mon., Fri. 4-5 p.m.
By:- கருணாநிதி
Bio- Mon., Fri. 5-6 p.m.
By:- தற்பரன்
Maths - Tue., Thurs. 5-6 p.m.
By:- பிரதீபன்
(37026)

**NEW SCIENCE CENTRE**

மணிக்கூட்டுவீதி, யாழ்நகர்.
ORGANIC
Sat., Sun., 10 -11 a.m.
CHEMISTRY PAPER
Sat., Sun., 12 -1 a.m.
By:- அன்பழகன்
"Fields"
Sat., Sun., 6 a.m.
"Heat"
Sat., Sun., 8 -9 a.m.
By:- கருணாநிதி
(37026)

**நிறைஞ்சனாஸ்**

பிரபு, வைஜெந்தி நடிக்க
வண்ணத்தமிழ் பாட்டு
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்

சரத்குமார், மீனா, மந்த்ரா, வடிவேல், கோவைசரளா
மாயி (ரீல்ஸ்)
10.30, 2.30, 6.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடிக்க
சொக்கத்தங்கம் (ரீல்ஸ்)
காட்சிகள் தினசரி : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)


# மரண அறிவித்தல்கள்

## வல்லி அருளன்

மாவை கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சேச்லேன் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி அருளன் அவர்கள் நேற்று (19.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சேச்லேன்,*
*சங்கானை.* (15762)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி ஜீவன் நிர்மலா

இல.32/7, செபஸ்ரியார் வீதி, பாஷையூரைச் சேர்ந்த ஜீவன் நிர்மலா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் கபிரியேற்பிள்ளை - மரியசலோமி தம்பதியினரின் அன்பு மகளும் இராஜதுரை ஜீவனின் (அப்பலோ மருத்துவமனை, யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் இரட்ணராசா ராணி, சரோ, மலர், மல்லிகா, கிளி, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற போ.இராசதுரை மற்றும் அசெம்நா தம்பதியினரின் மருமகளும் ஜேசுதாசன், ரஞ்சன்- ரஜனி, சித்தி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2003) வியாழன் பிற்பகல் 3.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இறுதி ஆராதனையின் பின் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(15764)

தகவல்:
ஜீவன் (கணவர்).

## இராசா கனகலிங்கம்

(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் - புடைவை நெசவு கூட்டுறவுச் சங்கம், கோண்டாவில்)

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா கனகலிங்கம் அவர்கள் நேற்று (19.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சரோஜாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் இராசா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் தவமலர், பரமலிங்கம், குமாரலிங்கம், காலஞ்சென்ற மருதலிங்கம் மற்றும் சரஸ்வதி, இரத்தினசிங்கம் (தலைமை இலிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம், முருங்கன்), பரமேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசையா, இராஜேஸ்வரி, குணநாயகி, மணி, காலஞ்சென்ற சின்னையா மற்றும் ஆனந்தகௌரி, மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற கந்தசாமி, செல்வரட்ணம், காலஞ்சென்ற பேரின்பநாதன், மல்லிகாதேவி ஆகியோரின் மைத்துனரும் இரவீந்திரன் (ஜேர்மனி), அகிலேந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி, பாலேந்திரன் (கனடா), தனேந்திரன் (லிங்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காஞ்சனாதேவி (ஜேர்மனி), திருவிளங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபினியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவர் வீதி,*
*நவாலி வடக்கு,*
*மானிப்பாய்.* (15765)

தகவல்:
செ.திருவிளங்கம் (மருமகன்),
க.தனேந்திரன் (லிங்கா) (மகன்).

## திருமதி மங்கையர்க்கரசி கணேஸ்வரன்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி கணேஸ்வரன் அவர்கள் நேற்று (19.03.2003) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கணேஸ்வரன் (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் இராசையா - சரஸ்வதியின் அன்புப் புதல்வியும் சுமித்தா, சுகாஷ் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகரத்தினம், குவேந்திரநாதன் (ராசா), தர்மபூபதி, குசலகுமாரி, வசந்தகுமாரி, பிறேமா, பத்மநாதன் (கனடா), சுபாஷினி (கனடா), பாஸ்கரன் (கனடா), உதயதர்ஷினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புனிதவதி, ரஞ்சினிதேவி, கனகலிங்கம், கணேசலிங்கம், சண்முகராசா, தர்மகுலசிங்கம், கலாவதி, தர்மலிங்கம், ஜனனி, ஸ்ரீநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.03.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில், கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வன்னியசிங்கம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (15759)

தகவல்:
நாகரத்தினம் (நாகராசா),
குவேந்திரநாதன் (ராசா)
(சகோதரர்கள்).

## தர்மரெட்ணம் (செல்வம்)

யாழ்ப்பாணம், சென். பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், மத்தியூஸ் வீதியை வதிவிடமாகவும் கொண்டவரும் தற்போது டோகாவில் வசித்தவருமாகிய தர்மரெட்ணம் (செல்வம்) 10.03.2003 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பி.மனவல் (வவா செல்லத்துரை) - காலஞ்சென்ற திரேசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லர் டேவிட் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் கெலன் எலிசபேத்தின் (புவனா) அன்புக் கணவரும் தீபா, திலக், திலீப் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜசித்தா, ரெட்ணகுமார், றெமிசியஸ்குமாரி, ஆன்லூசியா, வசந்தி ஆகியோரின் அன்புச் சகோரனும் முத்துக்குமார், சகாயராணி, றாபி, கிறேசியன், உதயக்குமார், காலஞ்சென்ற கிறேகரி தங்கராஜா மற்றும் அல்வின், அலெக்ஸ், தேவு, கலிஸ்ரா, ராஜ்குமார், காலஞ்சென்ற றவி மற்றும் செல்லக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2003) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*70/20, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (15767)

தகவல்:
புவனா (மனைவி)

காலக்கெடு முடிந்தது

# உத்தரவை எதிர்பார்த்து அமெரிக்க துருப்புக்கள்!

வாஷிங்ரன்,மார்ச்20

அதிபர் சதாம் ஹுசைன் நாட்டை வட்டு வெளியேறுவதற்கு அமெரிக்கா விதித்த 48 மணிநேர அவகாசம் இன்று காலை ஆறு மணியுடன் முடிவடைகிறது.

இதனையடுத்து ஈராக் மீது போர் எந்த வேளையிலும் ஆரம்பமாகக் கூடும்.

உலகின் கவனம் முழுவதும் ஈராக் பக்கம் திரும்பியிருக்கிறது. ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பிப்பதற்காக அங்குள்ள காலநிலையை அமெரிக்க நிபுணர்கள் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குவைத் மற்றும் ஈராக் பாலைவனங்களில் வீசிவரும் கடுமையான மணல் புயல் அமெரிக்காவின் போர்த் திட்டங்களைப் பாதித்திருக்கின்றது.

மணல் புயல் நிலைமையை இராணுவ நிபுணர்கள் மதிப்பிட்டு வருகின்றனர். தாக்குதலுக்கான கட்டளையை எதிர்பார்த்து படைகள் தத்தமது நிலைகளில் தயாராக உள்ளன. இராணுவ திட்டமிடலாளர்கள் கடிகாரத்தையும் - காலநிலையையும் அவதானித்தபடி இருக்கின்றனர் என்று சி.என்.என். தொலைக்காட்சி இன்று அதிகாலை அறிவித்தது.

இதேவேளை -

பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்பார்த்து அமெரிக்கா முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டு இருக்கின்றன. (ஐ)

# மனித உரிமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டார். அதன் விவரம் வருமாறு:-

✪ கேள்வி:- ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இரண்டாம் நாள் பேச்சுக்களில் பங்குபற்றியுள்ளார். அதன் முக்கியத்துவம் என்ன?

★ பாலா:- ஜப்பான் நாட்டில் நடைபெறும் இந்தப் பேச்சுக்களில் ஜப்பானின் விசேட தூதுவர் நேரடியாகப் பங்குபற்றியிருப்பதை சர்வதேச முக்கியத்துவம்மிக்க ஒரு நிகழ்வாக நாங்கள் கருதுகின்றோம். சர்வதேச பொருளாதார வல்லரசு நாடு ஒன்று அரசு - புலிகள் பேச்சுக்களில் நேரடியாகப் பங்குபற்றுவது மிக முக்கியமானது.

அகாஷி உடனடி மனிதாபிமானத் தேவைகளுக்கான 'சிரான்' உபகுழுவின் ஆலோசகராகவும் இருக்கின்றார். கிளிநொச்சியில் நடைபெற்ற 'சிரான்' கூட்டங்கள் இரண்டில் நேரடியாகப் பங்குபற்றியும் இருக்கின்றார். 'சிரான்' உபகுழுவுக்கு வழங்கப்படப் போகின்ற நிதியுதவிகள், செயற்பாடுகள், உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது ஆராயப்படும் விடயங்களாகும். எத்தகைய வேலைத் திட்டங்களில் ஜப்பான் அரசு முதலீடு செய்யப்போகின்றது என்பது பற்றிய தகவல்கள் போன்றவற்றை அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்காலம், அந்த மக்களின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் போன்ற விடயங்களில் ஜப்பான் அரசு நேரடியாகப் பங்கு கொள்ளப்போகின்றது என்பது அகாஷி இந்தப் பேச்சுக்களில் பிரசன்னமானதன் மூலம் தெளிவாகின்றது. இது இந்தப் பேச்சுகளுக்கு சர்வதேசப் பரிமாணத்தை கொடுத்தி ருக்கின்றது.

✪ கேள்வி:- இன்றைய பேச்சுக்களில் ஆராயப்பட்ட ஏனைய விடயங்கள் எவை?

★ பாலா:- இரண்டாம் நாள் பேச்சுக்களில் ஆராயப்பட்ட விடயங்களில் முக்கியமானது மனித உரிமைகள் விவகாரம்தான். சர்வதேசப் புகழ்பெற்ற மனித உரிமைச் செயற்பாட்டாளரான இயன் மார்ட்டின் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டார். மனித உரிமைகள் பேணும் விடயம் தொடர்பாகக் கையாளவேண்டிய முக்கியமான அம்சங்களை அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து நீண்டநேரம் விவாதித்தோம். தமிழர் தரப்பினால் முக்கியமாக பயங்கரவாதத் தடைச்சட்டம், அதனால் எழுந்துள்ள பிரச்சினைகள், பெரும் மனித உரிமை மீறல், அவலமாக மாறியுள்ள தமிழ்க் கைதிகளின் பரிதாப நிலைமை, சிறுவர்களின் பிரச்சினைகள், பெண்ணுரிமை சம்பந்தமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

ஐ.நா. சாசனங்கள், ஐ.நா. நியமங்கள் போன்றவற்றால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில பொதுவான மனித உரிமைகள் அடங்கிய ஒரு பிரகடனத்தை இருதரப்பும் செய்ய வேண்டுமென நாம் முடிவெடுத்திருக்கிறோம்.

இது குறித்து விரிவாக ஆராய்ந்து இயன் மார்ட்டினுடனும் கலந்தாலோசித்து - அனேகமாக - தாய்லாந்தில் நடைபெறும் அடுத்த சுற்றுப் பேச்சுக்களின் போது இந்தப் பிரகடனத்தை இருதரப்பும் வெளியிடும்.

தனி மனித உரிமைகள் மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் - ஒரு தேசியத்தின் - உரிமைகள் கூட இதில் அடங்கியிருக்கும். குறிப்பாக, தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைகூட அதில் நிச்சயமாகப் பிரஸ்தாபிக்கப்படும். அது கட்டாயம் அந்தப் பிரகடனத்தில் இடம்பெற வேண்டும் என நாம் வலியுறுத்தியுள்ளோம்.

**பாதுகாப்பு வலயங்கள்**

✪ கேள்வி:- தமிழர் தாயகத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் இராணுவத்தினரை விலக்குவது குறித்து இப்பேச்சுக்களில் ஏதும் ஆராயப்பட்டதா?

★ பாலா:- ஆம். இது தொடர்பாக இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் பலகல்ல அறிக்கை ஒன்று சமர்ப்பித்துள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் - வடக்கில் - பொதுமக்களின் 780 வீடுகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதாயின் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் வேறு இடங்களில் புதிய முகாம்களை - தளங்களை இராணுவம் அமைக்க வேண்டும். அதற்கு உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் பயன்படுத்தப்படாமல் இருக்கும் பொதுமக்களின் காணிகளைப் பயன்படுத்தலாம் என்று அந்த அறிக்கையில் அவர் யோசனை தெரிவித்திருக்கிறார். அந்தக் காணிகளில் படை முகாம்களை அமைத்து வீடுகளில் இருக்கும் துருப்புக்களை அங்கு நகர்த்தி, வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கலாம் என்று கருதுகின்றார் அவர்.

'நாம் இந்த ஆலோசனையை முற்றாக நிராகரித்துள்ளோம். இது எமது மக்களுக்கு சொந்தமான காணிகள், ஏற்கனவே இருந்த வீடுகளில் இருந்து நகர்ந்து அருகிலுள்ள காணிகளில் துருப்புக்கள் நிலைகொள்வதில் அர்த்தமில்லை. அதை நாங்களும் அனுமதிக்கமாட்டோம்; எமது மக்களும் அனுமதிக்கமாட்டார்கள்.

யாழ்.மக்களைப் பொறுத்தவரை நிலமும் கல்வியும்தான் அவர்களுககு முக்கியமானவை. அதை நாம் மறக்கக்கூடாது.

ஏற்கனவே உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருந்து வெளியேறுவதற்கு அரச துருப்புக்கள் பின்னடித்ததால் தான் உயர் பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியில் உள்ள பிரதேசங்களில் இருந்தாவது வெளியேறுங்கள் என நாம் வலியுறுத்தினோம். அதற்கு அவர்கள் இணங்கியிருந்தாலும், இப்போது தாங்கள் போவதற்கு இடமில்லை எனத் தெரிவித்து தடைபோடும் யோசனையை முன்வைக்கிறார்கள்.

மேற்படி காணிகளில் தாங்கள் முகாம் அமைக்கும் திட்டத்துக்கு புலிகள் இணங்குவார்களா என்று அவர்கள் கேட்கின்றார்கள். நாம் ஒருபோதும் இணங்கமாட்டோம், எமது மக்களும் அதற்கு ஒருபோதும் இணங்கமாட்டார்கள் என்பதைத் திட்டவட்டமாக தெரிவித்தோம்.

காணிகள் எமது மக்களுக்குச் சொந்தமானது. இப்போது பயன்படுத்தப்படாமல் இருக்கலாம். வெளிநாட்டில் இருக்கும் எமது மக்கள் பலரின் காணிகள் அங்கு உள்ளன. அவர்கள் நாடு திரும்பி வீடு கட்டுவார்கள். ஏனைய காணிகள் தோட்டச் செய்கைக்கு உரியவை. 'சும்மா' காணி என்று காணி ஏதும் யாழ்ப்பாணத்தில் இல்லை. எனவே, இதற்குள் வந்து காலை வைக்காதீர்கள் என்று கொஞ்சம் இறுக்கமாக - சூடாக - சொல்லியுள்ளோம். (ஐ)

## உளவுத்துறை...

(முதலாம் -பக்கத் தொடர்ச்சி)

னார் எனவும் அறியப்படுகிறது. மட்டக்களப்பைச் சேர்ந்த ரகுபதி உயிராபத்துக் காரணமாக கொழும்புக்கு வந்து பாதுகாப்புத் தேடிக்கொண்டார் எனவும் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் ரகுபதி தனது பிள்ளைகளுடன் கல்கிசை பீரிஸ் வீதியில் சென்று கொண்டிருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவரைக் கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து கல்கிசைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)


## பூபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டப் பிரதிநிதி சிறிநாத் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை யாழ் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பி.ஈஸ்வரன் ஏற்றினார். ஈகச்சுடரினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் விக்கினேஸ்வரனும் மாவீரர் அன்பரசனின் சகோதரி செல்வி இ.விசாலினியும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது. மாவீரர் அருணனின் சகோதரி செல்வி அ.மேகலா அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து நினைவு நாள் உரையினை யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசாவும் சிறப்புரையினை யாழ். நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரனும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், கல்வித் திணைக்கள மற்றும் மாநகரசபை ஊழியர்கள் உட்படபலர் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் பணிமனையில் மற்றும் பொது இடங்களில் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-சி-17)



போர் மூண்டால் லட்சக்கணக்கான ஈராக்கிய குழந்தைகள் பட்டினியால் உயிரிழக்கும் ஆபத்து உள்ளது. பக்தாத்தில் தனது குழந்தைக்கு நச்சு வாயு பாதுகாப்பு முகமூடியை அணிந்து பார்க்கும் ஓர் ஈராக்கிய தாய்.

போதியளவு கையிருப்பில்:

# எரிபொருள் தட்டுப்பாடு உடனடியாக ஏற்படாது!

யாழ்ப்பாணம்,மார்ச்20

குடாநாட்டின் போதியளவு எரிபொருள் வகைகள் கையிருப்பில் இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் என்பன விநியோக நிலையங்களுக்கு போதியளவு வழங்கப்பட்டிருப்பதாகவும், வழமையான ஒழுங்கின் பிரகாரம் எரிபொருள் வகைகள் தரைவழியாகவும், கப்பல் மூலமும் எடுத்துவரப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈராக் மதான போர் நெருங்குவதை அடுத்து எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று பாவனையாளர்கள் அஞ்சுகின்றனர். மண்ணெண்ணெய், பெற்றோல் என்பனவற்றை பாவனையாளர்கள் தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்ததை நேற்று அவதானிக்க முடிந்தது.

எரிபொருளுக்கு தட்டுப்பாடு என்று பரப்பப்படும் வதந்திகளை நம்பி தேவைக்கு மேலதிகமாக அவற்றை வாங்கி செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தவேண்டாம் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாவனையாளர்களை அறிவுறுத்தியுள்ளது.(ஐ-17)

## பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக நிபந்தனைகளை விதித்தார்.

இந்த நிபந்தனையின அடிப்படையிலேயே உதவி வழங்கும் நாடுகள் தமது நிதி உதவிகளை அபிவிருத்தித் திட்டங்களிற்கு வழங்க முடியுமெனவும், இவற்றைப் பெறவேண்டுமானால் பேச்சுக்களில் உருப்படியான முன்னேற்றம் காட்டவேண்டும். அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான கருத்துப் பரிமாறல்கள் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தினால் மட்டுமே இந்த நிதியுதவிகள் வழங்கப்படுமெனவும் வெற்றுக காசோலைகளை வழங்கமுடியாதெனவும் யசூசி அகாஷி இந்த அமர்வின் போது தெரிவித்தார்.

- இவ்வாறு அந்த செய்தி ஏஜென்ஸி தெரிவித்தது.

உதவி வழங்கும் மற்றைய நாடுகளின் கருத்துக்களை நோர்வேப் பிரதிநிதிகள் விரிவாக எடுத்துரைத்தனர்.

அடுத்த மாதம் 29ஆம் திகதி முதல் மே மாதம் 2ஆம் திகதி வரை அடுத்த சுற்றுப் பேச்சுக்களை தாய்லாந்தில் நடத்துவது என்று இணக்கம் காணப்பட்டது. (ஐ-4)

## பொதுநலவாய செயலகத்தின் திட்டமிடல் குழு வருகிறது

யாழ்ப்பாணம்,மார்ச்20

பொதுநலவாய செயலகத்தின் இலங்கைக்கான திட்டமிடல் குழுவினர் இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இக்குழுவினர் குடாநாட்டில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். யாழ். செயலகத்தில் அரச அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளை இணையப் பணிமனையில் சந்திப்பர்.

அன்னையர் முன்னணி மற்றும் இளைஞர் மன்றங்களின் பிரதிநிதிகளையும் குழுவினர் சந்திக்கவுள்ளனர். (ஐ-10)

## சிரான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் நிதி வந்து கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டிருப்பதை அவர் விளக்கினார். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அவர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இந்தப் பேச்சுக்களால் பயன் ஏதுமில்லை என்று தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

- இவ்வாறு பாலசிங்கம் தெரிவித்தார். (ஐ)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
BY:-லீலாக்கிருஸ்ணான்
ஆரம்பம் 22.03.2003 SAT.4.30
(15741)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான – சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
மெயின்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0777-733992
(C25688)

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
சான்றிதழ் வழங்குதல்
எமது நிறுவனத்தில் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து இதுவரையிலும் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் உடனடியாக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 அ(1)ம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.